தென்மொழி

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்





பொய் சாகும்; மெய் வெல்லும்!

பொய் சாகத் தான் சாகும்;
புரட்டழியத் தான் அழியும்;
மெய் பூத்துக் காய்த்துக் குலை தள்ளும்–அது
மேன்மேலும் கனிந்து பகை வெல்லும்!

இருள்போகத் தான் போகும்;
இழிவகலத் தான் அகலும்;
மருள்மாய உரைகள் அடிசாயும் – ஆர
வாரத்தின் கொழுமை முடி காயும்!

வயிறெரியத் தான் எரியும்;
வாய்நோகத் தான் நோகும்;
கயிறுதிரிப் போர்க்கு நமைக் கண்டால்! – ஒரு
காலம் வரும்; போற்றுவர் பூச் செண்டால்!

துயர் சேரத் தான் சேரும்;
துணை வருந்தத் தான் வருந்தும்;
அயர்வுறுதல் மறவர்க் கழ கன்றே! – பேர்
ஆண்மையன்றோ பொறுத்தல்; குணக் குன்றே!

உளம்நோகத் தான் நோகும்;
உயிர் சோரத் தான் சோரும்;
விளங்கட்டும் தமிழர்குழு காயம்! – உயிர்
வெல்லமில்லை; உரிக்கும்வெங் காயம்!

உடல்வாடத் தான் வாடும்;
உயிர் போகத் தான் போகும்;
கெடல் வந்த போதில்அறங் காக்கும்! – மெய்
கிளைகிளையாய்த் துளிர்விட்டுப் பூக்கும்!

சுவடி: 9. ஓலை: 1. விலை 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 247: தமிழ் நாடும், தமிழ்மொழியும், தமிழரும் தலைநிமிர்ந்து தலைசிறந்து வாழவேண்டும் என்னும் பெருநோக்கை உள்ளத்திற் கொண்டு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் உங்கள் பணியில் நானும் பங்குகொண்டு நற்பணியாற்றுவதில் நனிமகிழ் வெய்துகிறேன். தமிழர்களின் கைவேலாம் தங்கள் தாளிகை நாளும் வளர என்னால் ஆன உதவியை நான் செய்ய முற்பட்டுள்ளேன். அதன் பொருட்டு என் நண்பர்கள் பலரிடம் நாடு, மொழி முதலியவை பற்றியும், அவற்றிற்கு நாம் செய்யவேண்டிய கடமை பற்றியும், அவற்றில் தாங்களும், தங்கள் தாளிகையும் ஆற்றிவரும் தொண்டு பற்றியும் எடுத்துக் கூறி அவர்களையும் 'தென்மொழி' படிக்குமாறு கூறியுள்ளேன். –க. தமிழப்பன், குறுக்கபாளையம், திருப்பூர்.

0: 248 சுவடி–8; ஓலை 11–12 தென்மொழி கண்டோம். அதன் கண், புலவர் திரு. அடல் எழிலன் விடுத்துள்ள மடலும் கண்டோம். அம்மடலுள் அவர் கூறியன அனைத்தும் உண்மையாகவே தெரிகிறது. வையாபுரித் தெ. பொ. மீக்கள் எதனையும் செய்யத் தயங்கார் என்பதில் ஐயமின்று. எனவே போலிகைகள் தென்மொழி யில் வெளியிடாதிருத்தலே நன்றென எண்ணுகிறோம்.

– இரணியன், திருப்பூர்–2.

0: 249: செ. சொ. பி. பேரகரமுதலி உருவாக்க வெளியீட்டுத் திட்ட உறுப்பினர் பட்டியலை ஒவ்வொரு மாதமும் தென்மொழியில் வெளியிட்டு நான்கு பக்கச் செய்திகளைக் குறைக்க வேண்டியதில்லை. புதியதாகச் சேரும் உறுப்பினர்களின் பெயரை மட்டும் வெளியிட்டால் போதும். வெளியிடத்தான் வேண்டுமெனின், தென்மொழியின் ஒவ்வொரு சுவடியின் முதல் ஓலையில் மட்டும் வெளியிட்டால் போதுமானது எனக் கருதுகிறோம். எனினும் நும்மெய்யறிவுக் குற்றவாறாற்றுக. இல. க. இரத்தினவேல், திருச்சி–1.

0: 250: யான் ஒரு ஆங்கில இலக்கியம் பயிலும் மாணவன். தென்மொழியன்பன். தனித்தமிழ் வளர்க்கப் பாடுபடும் உண்மை ஊழியன். தென்மொழியையும், தந்தை பாவாணரைப் பற்றியும், உ. த. கழகத்தைப் பற்றியும் என் வகுப்பு மாணவர்களிடை மட்டுமே யன்றி, எனது ஊரிலும் பரப்பி வருபவன். யான் ஆங்கில இலக்கியம் கற்பதன் நோக்கம் மேலையறிவியல் நூல்களில் சிலவற்றை நமது தன்னேரில்லாத் தமிழ் மொழியில் அதன் உயிர்த் தன்மை கெடாமல் மொழி பெயர்க்க வேண்டும் என்பதே. ஆங்கில மக்களிடையே நமது நாகரிகம் பற்றி விளக்கவேண்டும். பாவாணர் எழுதிய இரு ஆங்கில நூல்களையும் வெகுவிரைவில் வாங்கிப் படிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளேன். அவரின் 'வடமொழி வரலாறு' எங்கள் நூலகத்தின் வாயிலாகப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன், 'தமிழ்மொழி வேர்ச்சொல் அகர முதலி' எழுத தந்தை பாவாணரையே யன்றித் தமிழகத்தில் வேறு ஒருவராலும் முடியாது என்பது வெள்ளிடைமலை. க. துரைராசு,

கோ. மலையாண்டிப்பட்டணம், பொள்ளாசி (வட்டம்.)

(தொடர்ச்சி 3–ஆம் அட்டைப்பக்கம்)



தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை" பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி : 9 ஓலை : 1.

மேழம் தி. பி. ௨௦௦௨ – (மே – 1971.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

வங்காளம் தரும் பாடம்!

வங்காள மக்கள்!
மங்காத உணர்வினர்!
பொங்கிப் பாய்ந்தெழும்
பூரித்த தோளினர்!
மண்ணைத் தாயென வணங்கும் மரபினர்;
புண்ணைத் தழும்பெனப் போற்றும் மறத்தினர்;
மொழியை உயிரென முழங்கும் மாண்பினர்;
அழியா இலக்கியம் ஆர்க்கும் அறிவினர்.
பழிவரின் உள்ளம் பதறுமா னத்தினர்;
இழிவெனின் உயிரையும் எள்ளும் இயல்பினர்;
ஓவியக் கலைஞரும் உருவியத் தச்சரும்
பாவியப் புலவரும் படைத்தலை மறவரும்
நாட்டியக் கூத்தரும் நல்லிசை வாணரும்
ஈட்டிய பெரும் புகழ் கூட்டிய இனத்தினர்!

இந்திய மக்கள் யாவரும் ஆங்கிலர்
சிந்திய சோற்றுப் பருக்கையைப் பொறுக்கி
உண்டு களித்தே உறங்கிடும் பொழுதில்
பண்டைப் பெரும்புகழ் மீட்டும் பான்மையில்
முந்தி முந்தி முரசம் முழக்கி
எந்தாய் நிலத்தை எமக்குக் கொடுவென
வெள்ளையர் தம்பால் விடுதலை கேட்ட
உள்ளொளி நிரம்பிய உரிமை உளத்தினர்!
பெண்டிர் அனைவரும் கற்பின் பெற்றியர்;
பண்டை வரலாறு படைத்த பாவையர்!

சுருங்கச் சொன்னால் தமிழரோ டிவர்கள்
ஒருங்கே பொருந்திய ஓரினம் எனலாம்!
ஆயினும் இற்றைத் தமிழர்போல் அடிமையால்
தாயினம் பேணாத் தகவிலர் அல்லர்!
காக்கை போலக் கரைந்துணும் பண்பினர்;
பீக்கைச் சோற்றுக்குப் பிறர்க்குநம் போலக்
காட்டிக் கொடுக்கும் கயவர்கள் அல்லர்!
நீட்டி முழக்கு வானேன்? இங்குப்போல்

வரலா றழிக்கும் வையா புரிகள்,
திறமையாய்ப் புளுகும் தெ. பொ. மீக்கள்,
சொல்லின், 'செல்வ'ராம் சே(ரத்)துப் பிள்ளைகள்,
மூக்கு வெயர்த்த முத்துச்சண் முகங்கள்,
பத்தி லக்கப் பத்தவத் சலங்கள்,
சுத்திக் காம்பாம் சுப்பிரமணி யன்கள்,
எனும்படி அவரினத் தெவரும் இருக்கார்.
இனும்பிடி படும்படி எடுத்துரைப் பதெனில்
அற்றைக்குத் தமிழினம் இருந்த அமைப்புப்போல்
இற்றைவங் காளியர் இனமென் றுரைக்கலாம்;
(இற்றைத் தமிழர்போல் உலகில் இழிந்த
ஒற்றைத் தனியினம் உவமைக் கில்லையே!)
எங்கிது கிடக்க! –

–இத்துணைப் பெருமையும்
தாங்கும் வங்காளத் தலைமை மக்களின்
இன்றைய நிலைமை என்ன?—என் றறிந்தால்
கன்றிய நெஞ்சம் கண்ணீர் வடிக்கும்!

மயிர்பொடித் துதிரும்; மாவுடல் நடுங்கும்;
உயிர்துடித்(து) 'ஓ'வென ஓலமிட் டழுங்கும்!
வாழ்க்கை வெறுக்கும்; உலகெலாம் வறண்ட ஓர்
பூழ்க்கைப் புழுதியாய்க் கண்களிற் புலப்படும்!
ஏந்தலர்! பகுத்தறிவு ஏய்ந்தவர் எனப்படும்
மாந்தரின் பெருமை மண்ணாய்ப் போகும்!
மறமும் பேய்மையும் கொண்ட மக்களின்
அறமும் கல்வியும் அரற்றலாய்த் தெரியும்!
வல்லர சென்றும் நல்லர சென்றும்
சொல்லப் படுவன சுடுகா டாகும்!

சமயப் பெருமைகள் சாணியாய் நாறும்!
அமைந்துள கோயில்கள் ஆட்டங் கொடுக்கும்;
கோபுரப் பெருமை குப்பைமே டாகும்;
காப்புடைக் கடவுள் எனக்கை யெடுத்துக்
கும்பிடும் பெருமைபோய்க் குழவிக் கல்லென
வெம்பிக் கூறிட வேண்டி யிருக்கும்!

அத்தகு நிலைக்கு–அதை ஆளாக் கியவோர்
தீத்திருக் கணை–(பேர் சாற்ற நா கூசும்)—
இன்னுமிவ் வுலகமும் இதிலுறை மக்களும் —
(மண்ணாங் கட்டி! மக்களாம் மக்கள்!)
-விட்டுவைத் துளரெனில், வேறென்ன சொல்வது?
சட்ட மன்றமாம்! சட்டங் காக்கும்
அறநெறி மன்றமாம்! ஆட்சியாம்! அரசாம்!
திறமையாம்! அமைச்சராம்! சென்னையாம்! தில்லியாம்!
பாராளு மன்றமாம்! படை,பட் டாளமாம்!
நேரான பொருளும் இவற்றிற் கென்னெனில்
ஊரை,ஏ மாற்றி உலையில் இடுவதே!

இவ்விடத் தில்தான் எண்ணுதல் வேண்டும்.
ஒவ்விய கொள்கையால் உரங்கொண்ட தமிழர்
அங்கிங் கொருவ ராகிலும் இருப்பர்.
இங்கிவை அவர்செவிக் கேறும் என்றுதான்
பாட்டடி கொண்டுநான் பதற எழுதுவேன்!
காட்டடி அடிக்கும் அரசியல் காரர்க்கு
எல்லா அடிகட்கும் 'இடையில் அடிக்கும்'
பொல்லாக் 'கையடி' ஒன்றே பொருளாம்.
இதுவும் கிடக்க –

— இற்றைநாள் இளைஞர்

புதுவுணர் வெய்திப் புரட்சியென் றார்ப்பர்;
விடுதலை யே,நாம் வேண்டுவ தென்பர்;
கொடுதலை என்னிலும் கொடுக்கமுன் வருவர்!
அன்ன இளைஞரை அன்புடன் வேண்டுவேன்;
என்னுரை தவறெனில் என்னைத் திருத்துக!

விடுதலை என்பது வேண்டுகோள் அன்று!
தொடுதலைத் தவிர விடுதலை அறியாப்
பூட்கையோர் தம்மின் வாழ்க்கையே விடுதலை!
வேட்கையும் உண்டு;அது நாடுவேண் டுவதே!
எண்ணமும் உண்டு;அதும் எதிரியைப் பொடிப்பதே!
பண்ணும் உண்டு;அதும் படைப்பா டல்களே!

அத்தகு விடுதலை ஆர்த்த ஓர் இனந்தான்
மெத்தவங் காளியர் மேட்டிமை இனமாம்!
அந்த இனத்தின் அரற்றலும் அழுகையும்
எந்த இனத்தின் எழுச்சியும் ஒடுக்கும்!
விடுதலைப் பேச்சையே வெறுப்புடன் ஒதுக்கும்!
கெடுதலை நமக்கேன்-எனவினா கேட்கும்.
உரிமை கேட்பதே உயிர்க்கொலை என்னும்!
நரிகளும் நாய்களும் நாயகம் ஏற்றால்
கழுகும் காக்கையும் காவல் காக்கும்!
அழுகலும் நாறலும் அன்றாட நிகழ்ச்சி!
உண்மையும் உரிமையும் உயிரற்றுக் கிடக்க
வெண்மையும் வெறுமையும் வெண்குடை பிடிக்கும்!

வெறியோன் ஒருகால் அரசினை வென்றால்,
அறிவினார் எவரும் ஆட்சிக்கு வேண்டா.
எத்தகை ஆற்றலும் எழுச்சிகொள் ளாமல்
மெத்தவே அடக்கவும் சொற்களால் மிரட்டவும்
படிந்தால் அடிமைப் படுத்தவும், படிப்படி
முடிந்தால் அழிக்கவும் அழிவினை மூடவும்,
துணிந்து செய்யலாம்; பொய்யைத் தூற்றலாம்!
பணிந்து செல்லுதல் பழிக்கிடன் என்று,
பதவிக் கையன் பலவும் செய்யலாம்!
உதவிக்குத் தம்போல் ஒருவரை அழைக்கலாம்!
'அமெரிக்கா' போன்ற,வல் லரசையும் அணுகலாம்;
குழறிக் குழறிக் கொலைநடுங் கிடவே

மக்களைக் கோடியாய் மாளச் செய்திடத்
தக்க கருவிகள் தந்தும் உதவலாம்!
காலக் கொடுமையால் மக்களின் கருத்துகள்
ஓலத்தும் சாவிலும் ஒடுங்குதல் உணர்க!

இத்தகு நிலையில் எந்தமிழ் நாட்டில்
புத்துருக் கொளுமொரு புரட்சியைத் தோற்றினால்
என்ன விளையுமென் றெண்ணிப் பார்க்கிறேன்;
மின்னலொன் றென்னுடை மேனியில் பாய்ந்தது!
மந்திரம் அன்று மாயமும் அன்றே!
இந்திரா காந்தி யாகியாக் கானும்
மாறி நந்தமிழ் மக்களை மாய்த்தால்
வேறுயார் நமக்குத் துணைவர விரும்புவார்?
எண்ணிப் பார்க்கிறேன் ...!

– இந்திரா வெனுமொரு
பெண்ணிற் கத்தகு துணிச்சல் பிறக்குமா?
பிறப்பினும் பிறக்கா தாயினும் நம்முடை
'சிறப்புத்' தமிழரைச் சிறிதே நினைக்கிறேன்;

வங்காளர் துணிவு தமிழர்க்கு வருமா?
வங்காளர் ஒற்றுமை தமிழரில் வாழுமா?
சிறுத்தைபோல் அன்று; கூற்றமாய்ச் சீறும்
திறத்தினில் அவர்போல் தமிழர் திகழ்வரா?
குருதி ஆற்றினில் குளித்து மூழ்கிடும்
உறுதி நம்மிடை ஒருதுளி இருக்குமா?
பேச்சுப் பேச்செனப் பேசித் தூவலை
வீச்சு வீச்சென வீசிடும் மறவர்கள்
உண்மை விடுதலை உயிர்த்ததிங் கென்றால்
திண்மை குறையாத் திறத்தொடு நிற்பரா?
எனைவகை யால்நாம் தேறியக் கண்ணும்
வினைவகை யால்வே றாகிடும் மாந்தர்
பலர்எனக் குறள்மொழி பகர்ந்ததே; யாரை?
சிலர்எனில் முனைந்திடச் சிறிது கருதலாம்!

இன்றோ,
எதற்கெடுத் தாலும் இந்திரா காந்தி
கதவுகள் மூடிக், காதுகள் பொத்தி
ஊமையாய் இருந்திடக் கண்டும் நம்மவர்
ஆமையாய் ஒடுங்கி அடங்கிய பின்னரும்,

திண்ணையில் படுத்துத் திராவிடங் கேட்ட
அண்ணாத் துரைகள் அடங்கிய பின்னரும்,

'திராவிடம்' போய்,'தமிழ் நாடு'போய், பெரியார்
'இராமற்குச் செருப்படி' என்ற பின்னரும்.

இந்தியால் இறந்த இருநூற்று வரையும்
செந்தீக் கொளுவிச் சிதைந்தோர் நினைவையும்
ஒருங்கே மறந்து,அவர் உயிர்பறித் திட்ட
பெருங்கல் நெஞ்சன்–அரசியல் பேயன் –
பத்த வத்சல சுப்பிர மணியரோ
டொத்து,ஊ தற்குநாம் ஒப்பிய பின்னரும்,

தன்னாட்சிக் கொள்கையைத் தரையினில் புதைத்துத்
தென்னையும் பனையும் தேடிய பின்னரும்,

என்னருந் தமிழகம் விடுதலை எய்திட
முன்னர் எழுந்து முழங்குதற் காருளர் ?

வடவர் வண்டியில் வலமோ இடமோ,
இடமுண் டென்றால் ஏறுங்கள் என்றே
தமிழரை அழைக்கும் தலைவரே அல்லால்
கமழும் விடுதலைக் களம்புக வருவர்–யார் ?

அமைச்சர் பதவியில் அமர்ந்ததும் அவரவர்
நமைச்சலை அடக்கவே நாழிகை இன்றி –
பட்டந் தாங்கவும் பட்டுடை யேற்கவும்
கொட்டம் அடிக்கவும் கொடுப்பதை வாங்கவும்
நேரம் இன்றி– நினைவின்றி – அலைகையில்
காரம் போன விடுதலைக் கனவை
எண்ணிப் பார்த்திட எவருளர் ? உரிமைப்
பண்ணின் எழுச்சியைப் பாடிட வருவர்–யார் ?

என்னருந் தமிழரை இதோ–காண் கின்றேன்:

தந்நலம் ஒன்றே குறிக்கோள் தாங்கிப்
பொதுநலம் என்றால் பொருளெது வென்னும்
நொதிந்து போன நொள்ளையர் ஒருபுறம் !

அந்தநொள் ளையரை ஆரவா ரத்தால்,
தந்திரப் புளுகால் தலைத்தலைப் புகுந்தே
ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர் ஒருபுறம் !
தாமுமாற் றாமல், தமரையும் விடாமல்

நெடுங்கிடைக் குறுக்காய் நீட்டிப் படுத்தே
ஒடுங்கிய உளத்தொடு பழமையில் ஊறிப்
புலனும் பொறியும் புரையிட் டோடிய
குலமும் சமயக் கூச்சலும் ஒருபுறம்!

நிலமும் நீரும் இவ்வகை நேர்தலால்
நலமும் விளைவும் நலிவுறத் தோன்றிய
இளையோர் கூட்டம் ஒருபுறம்! அவரொடு
வளையோர் கலந்திடும் வலிப்புகள் ஒருபுறம்!

– இத்தகு சூழலில் விடுதலை ஏந்திப்
புத்துணர் வாலொரு புரட்சி தோற்றிட
எண்ணிப் புறப்படும் இளைஞரீர்!–இந்த
மண்ணில் தோன்றிய மாசறு தொண்டரீர்!
கருத்துப் புரட்சியே முதற்கண் கருதுவீர்!
கருத்துப் புரட்சியே விடுதலைக் கருவி!
அதனால்,
எழுச்சி பெற்ற இளையோர் யாவரும்,
புழுச்சிறை போலும் புன்மை உலகினை—
சேற்றுப் புலத்தின் பழமைச் செருக்கினை—
மாற்றிடத் துடிக்கும் மனத்தினர் யாவரும்,
மணிமணி யான மாணவ ரனைவரும்
அணியணி யாகப் படைபடை யாக,
ஒன்றாய்த் திரண்டே ஊர்ஊ ராக
நன்றாய் ஊன்றுக புரட்சி நாற்றினை!
நாற்று வளரவே நாளும் கருத்துநீர்
ஊற்றுக; உழைப்பை உரமெனக் கொள்ளுக!

ஊக்கம் பெறுவீர்! இராப்பகல் உழைப்பீர்!
தூக்கந் தவிர்ப்பீர்! தூற்றுதல் எள்ளுவீர்!
வன்மையாய் உடலை வளர்ப்பீர்! வறிதாம்
புன்மையும் போலியும் ஒருங்கே புதைப்பீர்!
கருத்து மழையினால் கால நிலத்தினில்
குருத்துவிட் டெழுந்தே உரிமை குலுங்கிடும்!
குலுங்கும் உரிமையில் குமிழ்த்திடும் அதுதான்
இலங்கு விடுதலை எனுமொரு கதிரே!
வங்கா ளந்தரும் பாடம்
இங்கிது வல்லால் வேறொன் றிலதே!

— பெருஞ்சித்திரன்.

அண்ணாமலைநகர் அதிர்ச்சி!

கல்வி வளர்ச்சியைக் காலந் தின்றது!
பல்கலைக் கழகம் பரிந்து கொடுக்கும்
'பண்டா ரகர்'எனும் உயரிய பட்டம்
'சுண்டல்' ஆகுக! 'கடலை' யாகுக!
(அவைதாம் எனினும் அள்ளிக் கொடுக்க
எவரும் முன்வரார்!) எனவே, அதனை
'எவருக்' காகிலும் ஈந்து மகிழ்க!
'அவரும்' வாங்கி அடுக்கிக் கொள்க!
இதிலெலாம் நமக்குக் கவலையும் இல்லை;
புதிரிதை விளக்கப் பொழுதும் இல்லை!

அண்ணா மலையார் பல்கலைக் கழகம்
கண்ணா யிருக்கும் கல்வியால் பெருமை
பெற்ற நிலைபோய் பெருங்கல கஞ்செயற்
குற்ற நிலைக்களன் ஆனதும் உண்மையே!

அண்மையில் பட்ட மளிப்பு விழாவினில்
அண்ணா மலையில் நடந்ததை அறிந்தால்
யாகியாக் கானே 'தோற்றேன்' என்பான்!
காக்கை குருவியைக் கற்களா லடித்து
விரட்டுதல் போல மாணவர் தம்மை
விரட்டி யுள்ளனர் காவலர் வேங்கைகள்!
முரட்டுத் தனமாய்க் கைகால் முறித்துளர்!
இருட்டு வேளையில் வண்டியில் ஏற்றிப்
பற்பல ஊரிலும் பாதி வழியிலும்
வற்புறுத்தி யவரை இறக்கி வந்துளர்.
பறங்கிப் பேட்டைக் கடலினுள் அமுக்கிக்
கிறங்கச் செய்துளர் மாணவ மணிகளை!

மாணவர் விடுதியுள் காவலர் புகுவதும்
வீணாய் அவரை அடித்து வீழ்ப்பதும்
'பத்த வத்சலப்' பாணியென் றறிக!
முத்து வேலர் 'கருணா நிதி'க்கும்
அந்தப் பாணிதான் ஆட்சிக்கு உரித்தெனில்
இந்தப் படியே இன்னும் நடக்கலாம்;
அவரின் முடிவையே இவரும் அடையலாம்;
எவரும் தடுத்திடல் இயலாத வொன்றே!

— பெருஞ்சித்திரன்.

நூறுசிரியம்

பெருஞ்சித்திரன்.
(துரை-மாணிக்கம்.)

பாட்டு: உஎ.

நிலமுது கொருபுறம் நீடிய நிழலும்
பலகதி ரோடிய பகலும் போல
உளவோர் உண்மையும் இலவோர் இன்மையும்
அளவுவரைத் தன்றே! ஆயிரு மருங்கும்
நின்று நீளுதல் நீணிலத் தின்றே!
குன்றன்ன கொடிநிறுத்தித்
தின்றுய்யத் திருவாழினும்
ஒன்றிலார்க் கொன்றுவந் துதவல்
பின்றைத் தாம்பெறும் பெற்றியா மாறே!

பொழிப்பு: *நிலக் கோளத்தின் வளைந்த புறமுதுகின் ஒருபுறத்தே முன்னோக்கி நீண்டு கொண்டே போகின்ற நிழலாகிய இருளும், மற்றொரு புறத்தே பல்கோடிக் கதிர்க் கற்றைகளால் விளைந்து முன்னோக்கி ஓடிக் கொண்டிருக்கின்ற பகலொளியும் போல், இவ்வுலகின்கண் பொருள் உள்ளவரின் உள்வாந் தன்மையும், அஃதில்லவரின் இலவாந் தன்மையும் எல்லை நிலைப்புடையன அல்ல. அவ்விரு புறத்தும் ஒரு பொழுதில் நின்ற நிலையே தொடர்ந்து நீடிக்கப்பெறுதல் இவ்வகன்ற நிலத்தின்கண் யாண்டும் இல்லை. குன்றின் உயர்ச்சியளவாகத் தம் இலச்சினைக் கொடியை நிறுத்தி, அதன் பருமஅளவாகத் தாமும் தம் பிறங்கடையரும் தின்று உய்யும்படி தமக்குச் செல்வவளம் வாய்ந்திருப்பினும், அந்நிலைகளில் ஒன்றுதானும் அடைந்திலார்க்கு வேண்டுவதாகிய ஒருபொருளைத் தம் உள்ளம் உவக்குமாறு உதவுதலே, தமக்குப் பொருந்திய வளம் குன்றிய காலத்து தாம் துய்ப்பதற்குரிய வாய்ப்பு உருவாகும் வழியாம்!*

விரிப்பு: இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

உலக வுருண்டையைச் சுற்றிச் சுழல்கின்ற இரவும் பகலும் போல் மக்கட்கு வந்து வாய்க்கும் செல்வ நிலையும் வறுமை நிலையும் வரையறுக்கப் பட்டன வல்ல. இரு நிலைகளும் ஒரு நிலையிலேயே

நிற்றல் மாறாச் சுழற்சியுடைய நிலத்தின்கண் யாண்டும் நடைபெறுதல் இல்லை. குன்றுபோல் குவிந்த செல்வம் உடையவரும் பிற்காலத்து அதைத் தவறாது துய்த்தல் அரிது; அவ்வாறு துய்க்கும் வழி அந்நிலை ஏதும் இல்லாதவர்க்கு உளம் மகிழ்வடையும்படி கொடுத்து உதவுதலே ஆகும். என்று உலக வியற்கையை உணர்த்திக் கூறியதாகும் இப் பாட்டு.

செல்வம் நிலைப்படாதது; சுழற்சியுடையது. அஃது ஓரிடத்தே வந்து சேருங்கால் மனவெழுச்சி யுண்டாதலும், பிரிந்து செல்லுங்கால் மனவழற்சி ஏற்படுதலும் மாந்தநிலையில் இயல்பாந் தன்மைகளே. ஆனால் இவ்விரு நிலைகளினும் வேறுபாடு காணாத மெய்யறிவினார், அவற்றை ஒன்றுபோலவே கருதுவர். கருதித் தமக்குச் செல்வம் வந்துற்றுழி அதன் பயனை எல்லார்க்குந் துய்ப்பக் கொடுப்பர். அவ்வறிவில்லாதார் அவ்வாறு கொடாது, அதன் முழுப்பயனையும் தாமே துய்க்கக் கருதுவர். ஆனால் அவர் துய்ப்பதற்குள் அச்செல்வம் அவரைத் துறந்து பிறிதோரிடம் சேரும். இந்நிலையில் அச்செல்வத்தின் பயனை இவரும் பெறாது, இவரைச் சேர்ந்தவரும் பெறவிடாது நிற்பர். எனவே உலகவியல்புக்கு மாறாகிய இந்நிலையை அனைவரும் கடைப்பிடியாது தவிர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தாம் பெற்றவிடத்துச் செல்வத்தைப் பிறர்க்கும் பகிர்ந்துதவுதலே அச்செல்வத்தைத் துய்க்கும் வழி யென்பதை அறிவுறுத்தியும் கூறப் பெற்றது என்க.

என்னை, பெற்றவிடத்துப் பிறர்க்குப் பகிர்ந்து உதவுதல் அச்செல்வத்தின் பயனை முழுவதும் துய்ப்பதாகுமோ என்பார்க்கு, அவ்வாறு முன்னர் பகிர்ந்து கொடுத்த உதவியைப் பெற்றாரும், பின்னர் தாம் செல்வத்தைப் பெறுங்கால் தாம் பெற்ற அளவாகினும் திருப்பிக் கொடுக்கக் கடவர். ஆகலின், முன்னர் கொடுத்த செல்வம் ஓரிடத்துக் காக்கப் பெற்றுத் தக்கவிடத்து நமக்குத் திரும்புதல்போல் ஆவதால், அந்நிலை அச்செல்வத்தை முழுதும் துய்த்ததாகாதோ என்க. இனி, முன்னர் பெற்றார், தாம் பெற்ற அளவினும், தம் நன்றி புலப்படக், கூடுதலாகக் கொடுப்பதும் நிகழ்வதாகையால், அந்நிலையில் நம் சிறிய செல்வம் பேரளவில் பயன் நல்குதலும் கருதத் தக்கதாம் என்க.

அவ்வாறின்றி, நாம் ஒருநிலையில் பெற்ற செல்வத்தை ஒருவர்க்கும் கொடாது நாமே துய்க்க விரும்பிக் காத்து வைத்தல், இல்லாத

பிறர் அதனைக் கவர இடந்தருவதும், இருக்குங் காலத்து நாம் கொடாததால், நாம அதனை இழந்து துன்புறுங் காலத்துப் பிறரும் நமக்குக் கொடுக்க விரும்பாததும், செல்வத்தை எவ்வாற்றானும் நுகராத நிலைகளாம் என்க. எனவே பெற்ற செல்வத்தைத் துய்க்கும் சிறந்த வழி அதனைப் பலர்க்கும் பகிர்ந்து உதவுதலே என்று உறுதியாகக் கடைப்பிடிக்க, என்பதாம்.

நில முதுகு : நிலக் கோளத்தின் வளைந்த புறமேடு. நீரோ ஒளியோ ஓடுதற்குத் தட்டையினும் உருண்டு வளைந்த நிலையே சமவோட்டந் தருமாகலின், ஓடுகிற நிழலைக் குறிக்கு மிடத்து, வளைந்த நிலத்தையும் கருதவேண்டி யிருந்ததென்க.

ஒருபுறம் : ஒரு பாதி.

நீடிய நிழல் : நீண்டு கொண்டே போகும் நிழலாகிய இருள். ஒரு பொருளோடு இணைந்து நிற்பதாகிய இருள் நிழல். நில் + அல்- நிலல்-நிழல். நிற்றலாகிய இருள். அல் - இருள்.

பலகதிர் ஓடிய பகல் : பல கதிர்க்கற்றைகள் செறிந்து ஓடிக் கொண்டிருக்கும் பகல் - வெயில். திசை மாறுது நேராக ஓடுவதால் கதிர் எனப்பெற்றது. கதி - நேர்திசை - செல்திசை; கதிர் நேர் நோக்கிச் செல்வது. நெல், கம்பு, தினை முதலியவற்றின் மணிப் பூட்டைகளும் தாளினின்று குத்திட்ட நேராக எழுவதால் கதிர் எனப் பெயர் பெறுவதாயிற்று. பகல் (பகு + அல்) - இருளைப் பகிர்வது. - பிரிப்பது. - வேறுபடுத்துவது;

உளவோர் உண்மை : (செல்வம்) உள்ளவர்கள் உளதாம் தன்மை.

இலவோர் இன்மை : அஃதில்லாதவர்களின் இலதாம் தன்மை.

அளவு வரைத்து அன்று : அளவான் வரையறுக்கப்பட்டன அல்ல. உண்மையும் இன்மையும்.... வரைத்தன்று-என்றது பன்மை ஒருமை மயக்கம்.

நிழலும் பகலும் போல் உண்மையும் இன்மையும் என்னுமிடத்து நிரல் நிறை மாறி யுரைத்தது அவற்றின் மாறுபடும் தன்மையைப் புலப்படுத்துதல் வேண்டி என்க.

நின்று நீளுதல் : நிலைபெற்று நீட்சியுறுதல்.

நீணிலம் : நீண்ட நிலம். பரந்த உலகம்.

குன்றன்ன ...... வாழினும் : குன்றின் உயர்ச்சி போன்ற கொடியும், அதன் திரட்சி போன்ற செல்வமும் பெற்று வாழினும்.

கொடி நிறுத்தி என்றது குன்றுபோலும் செல்வத்தைத் துய்ப்பதற்குரிய உரிமை பெறுவதைக் காட்டியது, கொடி உரிமை இலச்சினை.

ஒன்றிலார்க்கு : ஒன்றும் வாய்க்கப் பெறாதவர்க்கு.

ஒன்று உவந்து உதவல் : அவர்க்குத் தேவைப்படும் ஒன்றினை உள்ள நிறைவோடு கொடுத்து உதவுதல்.

பின்றைத் தாம்பெறும் பெற்றி : தம் செல்வம் குறைவுபடும் பிற்காலத்துத் தாம் துய்ப்பதற்குரிய வாய்ப்பைப் பெறும் தன்மை.

தாம் ஒன்றை ஈந்தாலன்றித் தமக்குப் பிறர் கொடுப்பதிலர் ஆகலின், தாம் பின்னர் பெறும் பெற்றி முன்னர் தாம் ஒன்றை ஒருவர்க்குக் கொடுப்பதே என்க.

இது, பொதுவியலென் திணையும், பொருண் மொழிக் காஞ்சி என் துறையுமாகும்.

திரு. காரை - அறவாழியின் வள்ளண்மை!

அண்மையில் காரைக்காலில் நடந்த உ. த. க. தொடக்க விழாவின் பொழுது, வியட்நாம் தமிழன்பர் திரு. காரை – அறவாழி அவர்கள் பாவாணர் மேலும் தென்மொழியின் பாலும் காட்டிய பேரன்பும் பெருமதிப்பும் அனைவரையும் வியப்புக்குள்ளாக்கியது. பாவாணரின் செ.சொ.பி. அகரமுதலித் திட்டத்தைக் கூறியவுடனேயே அவர் தாமும் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டதுடன், ஐந்தாண்டுக்கான உறுப்பினர் தொகை முழுவதையும் அப்பொழுதே கொண்டு வந்து கொடுத்த அவரின் தனித்தமிழ்ப் பற்றை என்னென்பது! மறுநாள் அவர் கொடுத்த விருந்து அவரின் தூய தமிழ்நெஞ்சம் போல் இனித்தது. நானும் பாவாணரவர்களும் அங்குத் தங்கியிருந்த இரண்டு நாட்களிலும் அவரும், பூஞ்சோலை ஆசிரியர்கள் திரு. காரை – இறையடியான், திரு. காரை – அழகன் அவர்களும் தமிழன்பர் பிறரும் எங்கள்பால் அளவில்லா அன்பைச் சொரிந்து எங்களை மகிழ்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியதையும், திரு. காரை– அறவாழி அவர்கள் தம் இன்னியங்கியிலேயே எங்களைக் கடலூர் கொண்டு வந்து சேர்த்ததையும், தென்மொழி வளர்ச்சிக்கென உருபா நூறு நன்கொடை யளித்ததையும் என்றும் மறத்தற்கியலாது. அவர் அருளுள்ளம் இனிது வாழ்க! காரைத் தமிழன்பர் தம் பேருள்ளம் என்றும் வாழ்க!

— பெருஞ்சித்திரன்.

சுழற்பாதை நிலையம் "சல்யூத்"

த. சலாவுத்தீன். அறி. இ., ஆ. ப.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மாந்தர்கள் இயற்கையின் பல அமைப்புகளை அறிந்த வண்ணமே இருக்கின்றார்கள். கற்கால மாந்தன் கூட இரவில் விண்வெளியில் மின்னும் விண்மீன்களைக் கண்டு வியந்தான். அன்றிலிருந்து அவற்றைப் பற்றி அறிய முற்பட்டான். இன்று அவன் விண்ணில் தன் ஆட்சியைச் செலுத்தி அதனால் இயற்கையின் பல கமுக்கங்களை அறிந்த வண்ணமே இருக்கின்றான். விண்ணிலே பல வியப்பான அமைப்புகளை உடைய விண்வெளிக் கலங்களை அனுப்பிப் பல ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கின்றான். இதில் முன்னோடியாகச் சோவியத் நாடும் அமெரிக்காவும் இருக்கின்றன

விண்ணில் பல ஆக்கங்களைச் சோவியத் நாடு செய்துள்ளது; செய்தது கொண்டும் இருக்கின்றது. முதன் முதலில் "நிலவு – 16" (லூனு-16) அனுப்பி நிலவு மண்ணை அள்ளிக் கொண்டு வரும்படி செய்து. அதன் பின் 'நிலவு-17"–இல் ('லூனு' என்ற உருசிய மொழிச் சொல்லுக்கு நிலவு என்பது பொருள்) "லூனு கோத்" என்ற தானே இயங்கும ஊர்தியினை வைத்து நிலவுக்கு அனுப்பினுர்கள். அந்த ஊர்தியை மண்ணில் இருந்த வண்ணமே இயக்கி நிலாத் தரையின் பல்வேறு இடங்களில் செலுத்திப் பல ஆய்வுகளைச் செய்தனர். உலகில் இவ்வாறு முதலில் செய்தவர்கள் சோவியத் நாட்டவரே. இப்பொழுது "சோயுசு-11"-ஐ அனுப்பி இதற்கு முன்பே அனுப்பிய "சோயுசு – 10" என்கின்ற 'சுழற்பாதை நிலையமான' "சல்யூத்"துடன் சேர்ந்து பறந்து விரிவான அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுகளைச் செய்துள்ளனர். இதன்படி 1971, சூன் 6-ஆம் நாள் சோவியத் நாட்டு மூன்று விண்வெளி மறவர்களை 1. டொப்ரோவேசுகி (அகவை: 43) 2. விக்டர் பட்சேயேவ் (அகவை: 38) 3. விலாடிசுலாவ் வல்கோவ் (அகவை: 37)] ஏற்றிச் சென்ற விண்கலம் சல்யூத்துடன் வெற்றியாக இணைந்தது. இந்த ஆராய்ச்சியின் தலையான குறிக்கோள்கள்:—

1. விண்வெளியில் ஆய்வுச்சாலைகளை நிறுவுதல்.
2. விண்வெளி மறவர்களைச் சுழற்பாதையில் பறக்கும் அறிவியல் நிலையத்திற்குள் ஒரு போக்கு வரத்துக்கலம் மூலம் அனுப்பி வைப்பது.

3. எடையில்லாச் சூழ்நிலையில் எத்தனை நாட்கள் மாந்தன் என்னென்ன வேலைகள் செய்யமுடியும் என்பதனை அறிதல். இவை மட்டுமல்லாமல் ஏறத்தாழ 140 ஆய்வுகளை விண்வெளி மறவர்கள் செய்தல்.

"சல்யூத்-II"இன் அமைப்பு: "சல்யூத்-சோயுசு" ஆகிய அமைப்பின் மொத்த எடை 25 கல்லெடை (Ton)களுக்கும் மிகுதியானது. காற்றுப்புகா நிலையத்தின் உட்கொள்ளளவு ஏறத்தாழ 100 கனசீர் கோல் [மீட்டர்]. மிகுதி விட்டம் 4 சீர்கோல்; நீளம் ஏறத்தாழ 20 சீர்கோல்கள். பின்பாகத்தில் உருண்டை வடிவமான பகுதி கீழ்ப் புறத்திலுள்ளது. இதன் பிறகு கூம்பான எரிபொருள் கொண்ட தொட்டிகளும், இரண்டு சீர்கோல் விட்டமுள்ள இயங்கிகளின் இருப் பிடமும் இருக்கின்றன. வெளிப்புறத்தில் இறக்கைகள் உள்ளன. இவற்றில் கதிரவன் ஒளியிலிருந்து மின்சாரத்தை உண்டு பண்ணும் மின்கலங்கள் அமைக்கப்பட்டுள்ளன

இணைந்தவுடன் அவற்றின் மின் விசை, நீராற்றல் செய்திப் போக்குவரத்து அமைப்புகள் பிணைக்கப்பட்டன. விண்வெளியாளர் அறைகளின் காற்றுப் புகாத் தன்மையை ஆய்ந்தனர். நிலையத்தின் உள்ளிருந்து அமைப்புகளின் செயல் பாட்டை ஆய்ந்தனர். இணைக்கப்பட்ட விண்வெளிக்கலத்தின் அறைகளின் உள் தட்ப வெட்ப அளவுகளைச் சரிபார்த்தனர். இணைந்துள்ள காற்றுப்புகாப் புகுமுகத்தின் தாழ்களைத் திறந்து அதன்வழி அறிவியல் நிலையத்திற்குள் சென்றனர். இங்கு அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுகளுக்கும், நிலையம் பறப்பதையும், புறவெளியில் அதன் நிலையையும் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதோடு வலவர்களின் வேலைக்கும் ஓய்வுக்குமான நிலைகளை உறுதி செய்யும் அமைப்புகளும் உள்ளன.

'சல்யூத்' சுழற்பாதை நிலையம் பறக்கும் போது விண்வெளி மறவர்கள் நிலையத்தின் பலஇயக்கங்களை கட்டுப்படுத்திப் பார்த்தனர். நிலப் பரப்பின் மீதான வேதியல் பொருட்களைப் பற்றியும் பருவநிலை உருவாக்கம், நிலத்தின் மீது போர்த்திருக்கும் வெண்பனி, பனிக் கட்டி பற்றியும் ஆராய்ந்தனர். இந்தப் புள்ளி விளத்தங்களைப் பொருளியல் கடமைகளுக்குத்தீர்வு காண்பதற்கான முறைகளை வளர்க்கப் பயன்படுத்துவர். மின்காந்தக் கதிர் வீச்சின் வண்ண

மாலைகளின் பல்வேறு தொலைவுகளிலிருந்து வளி மண்டலத்திலும் புறவெளியிலுமுள்ள அளவையியல் தன்மைகள், போக்குகள் மாற்றங்கள் குறித்து ஆய்வு நடத்தினர்.

சல்யூத்தில் மருத்துவ ஆய்வுக்கும், விண்வெளிப் பறப்புக் காரணிகள் மாந்த உடற்கூற்றின் மீது செலுத்தும் ஆட்சியாக்கத்தைப்பற்றி ஆய்ந்து அறிய தனி இருக்கை அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிக்கருவி தமனிகளில் ஓடும் குருதியின் அழுத்தத்தையும், நெஞ்சாங்குலையின் துடிப்பையும் அளந்தது. தானே இயங்கும் நுண்ணிய கருவியின் மூலம் விண்வெளி மறவர்களின் குருதி, நிலத்திற்கு வந்தபின் ஆய்வு செய்து பார்க்க எடுத்துவைக்கப் பட்டது. எலும்புகளின் அடர்த்தி கணக்கிடப்பட்டது. கண்ணின் பார்வைத்திறன் எடையில்லாமையால் எவ்வாறு மாறுகின்றது என்பதும் ஆராயப்பட்டது. தசைகளின் வலிமை அளக்கப்பட்டது. இவற்றின் மூலம் பின்னால் அனுப்பப் போகின்ற விண்வெளிச் செலவுகளின் விண்வெளி மறவர்களின் உடலினை அதற்கேற்பச் சரிசெய்ய முடியும் என்பதும் தெரிகின்றது.

இவை மட்டுமல்லாமல் விண்வெளி மறவர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் அமைப்பையும் அதைச்செலுத்தும் போது அதைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் சரிபார்த்தனர். "அகலக் கோணக் காட்சி" (Wide angle sight)க் கருவி ஒன்றை முதன் முறையாகப் பயன் படுத்தினர். விண்வெளி, ஒளியியல் கருவிகள்மேல் என்ன விளைவை உண்டு பண்ணுகின்றது என்பதையும் ஆராய்ந்தனர். இதனால் திறன்வாய்ந்த தொலை நோக்கிகள் செய்து விண்ணில் மிகுந்த தொலைவிலுள்ள கோள்களையும் மண்ணிலிருந்தே ஆராய முடியும்.

இந்த ஆய்வுகள் வெற்றியுடன் முடிவடைந்ததால், புறவெளி நுட்பத்தினையும் மாந்தன் புறவெளியில் பறப்பதையும் வளர்ப்பதில் தலையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய புறவெளித் தொகுதி-சுழற்பாதை நிலையங்கள்—அவற்றைச் சீர்ப்படுத்த போக்குவரத்துக் கலங்கள் இவை எதிர்காலப் புறவெளி ஆராய்ச்சிக்கும், புறவெளி அறிவியல் தேசியப் பொருளியல் இவற்றின் வளர்ச்சியின் நலனுக்காகப் பயன் படுத்துவதற்கும் விரிவான வாய்ப்புகளை வழங்குகின்றன.

'சல்யூத்'தின் பெற்றியை எண்ணியெண்ணி உலக மக்கள் மகிழ்ச்சியடையும் நேரத்தில் நம் உள்ளங்களைக் கிழித் தெறியும் வண்ணம் ஒரு செய்தி வந்தது. ''வெற்றியோடு ஆராய்ச்சிகளை 24 நாட்கள் விண்ணிலிருந்து செய்துமுடித்த விண்வெளி மறவர்கள் கீழே வரும்போது இறந்துவிட்டனர்.'' என்பதுதான் அது.

எல்லாமே வெற்றியோடு முடிந்து விட்டதே என்று இயற்கை வெகுண்டு தான் இவ்வாறு செய்துவிட்டதா? எவ்வாறு இருந் தாலும் மக்களின் நலனுக்காகவும், புதிய அறிவியல் கருத்துகளை அறிவதற்காகவும் மூன்று விண்வெளி மறவர்கள், தங்கள் உயிரையே ஈகம் செய்துவிட்டனர். இஃது உலகுக்குப் பேரிழப்பாகும்.

'குறிஞ்சிப் பேரவை'யின் கொடைமை!

கடந்த வேனிற் பொழுதில் செ. சொ. பி. அகரமுதலித் திட்ட அடிப்படையில், ஆய்வுக்கென பாவாணரவர்களும், நானும் கோவை மாவட்டம் ஆனைமலைத் தொடரில் உள்ள வால்பாறை என்னும் மலைப் பகுதியில் மேழம்26 [மே–6] முதல் விடை 6 [மே–20] வரை, அங்குள்ள குறிஞ்சிப் பேரவையின் சார்பில், அதன் அமைப்பாளர் புலவர் திரு. மாரி. விசுவநாதனார் அவர்களின் அழைப்பையேற்றுத் தங்கவேண்டி யிருந்தது. திரு. மாரி. விசுவநாதனார் அவர்களும், பேரவையின் உறுப்பினர்கள் திரு. முத்துவேலனார், திரு. தாசன் போன்ற அன்பர் களும், குறிஞ்சிப் பேரவையின் செலவிலேயே எங்கட்கு உறையுளும் உண்டியும் கொடுத்து, மிக்க அன்புடனும் அக்கறையுடனும் புரந்தனர். அவ்வுதவி நாங்கள் எதிர்பாராத ஒன்று. மற்றும் அங்கிருந்த பொழுது எங்களைச் சோலையாறு, நீராறு, ஆழியாறு முதலிய பகுதி களுக்கு அழைத்துச் சென்றும், எங்கள் நோக்கத்திற்குத் துணை நின்றும் உதவி புரிந்த பேரவை அமைப்பாளர்க்கும் உறுப்பினர் களுக்கும், தென்மொழியன்பர் திரு. சிதம்பரநாதன் [சின்கோனாத் துறை] அவர்களுக்கும், எங்கள்மேல் அன்பு காட்டிய திருவாளர்கள் ஏசுவடியான், [உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்] அ.ம.சூசையா குருசு [உதவித் தலைமையாசிரியர்], செ. பாண்டியன் [தலைமை எழுத்தர், நகரிய அலுவலகம்.] முதலிய அன்பர்களுக்கும், எங்கட்கு அன்றுடம் அன்புடன் உணவு படைத்த தம்பியர் செங்குட்டுவன், இளங்கோவன் இருவர்க்கும், திரு. விசுவநாதனின் குடும்பத்தார்க்கும்; திரும்புகாலில் எங்களை வரவேற்று அன்பு காட்டி வழிச்செலவுக்கென உருபா ஐம்பது அன்பளிப்புச் செய்த அட்டகட்டி மின் பாறைத் தென்மொழி யன்பர்களுக்கும், தம் ஓய்வு நேரம் முழுமையும் எங்க ளுடனேயே இருந்ததோடன்றி, பொழில்வாச்சி [பொள்ளாச்சி] வரை வந்து எங்களை வழியனுப்பிவைத்த பேரன்பினர் திரு. முத்து வேலனார் அவர்களுக்கும் எங்கள் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக!

— பெருஞ்சித்திரன்.

'தென்மொழி'த் திட்டத் தேவநேயன் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

போலிகை யுருப்படிகள் (Specimen Articles)

4. பதி

(1) சொல் :- பதி.

(2) சொல்வகை :- (Part of Speech or word-class) — வினை. செயப்படுபொருள் குன்றாவினையும் (v. t.) செயப்படு பொருள் குன்றிய வினையும் (v. i.).

(3) புடைபெயர்ச்சி : (Conjugation) – 8 – ஆவது வகை. பதிகிறேன் (நி. கா.), பதிந்தேன் (இ. கா.), பதிவேன், (எ. கா.).

(4) பொருளும் ஆட்சிமேற்கோளும் : (Meanings and Illustrative Quota'tions.)

செயற்பெயர் வடிவு : (Gerundial form)

பதி – தல், செ. குன்றா வி. 1. பதிவேட்டில் எழுதுதல், to register, enter in writing. 2. பெயர்ப் பட்டியிற் சேர்த்தல், to take on the roll.

செ. குன்றிய வி. 1. ஆழ்தல், to sink in, as the foot or a wheel in mud; to enter, penetrate, as into a soft body. வண்டிச் சக்கரம் சேற்றிற் பதிகிறது. (உலக வழக்கு). 2. தாழ்ந்திருத்தல், to be low-lying, as land; to be depressed, sunk, hollow, worn away. நிலம் பதிந்திருக்கிறது. (உ. வ.) 3. தங்குதல், to settle, abide; to perch, roost, as a bird. "பதிசென்று பதிந்தனன்" (தணிகைப்பு. பிரமன். 2). 4. நிலையாதல், to be permanent, as a post. எனக்கு அரண்மனையிற் பதிந்த வேலையில்லை. (நாஞ். உ. வ.) 5. ஊன்றுதல், to be absorbed, engrossed, involved, as the mind in any object.

மனம் பாடத்திற் பதிகிறதா ? (உ. வ.) 6. முத்திரை, எழுத்தச்சு முதலியன அழுந்துதல், to be imprinted. impressed, marked, stamped, engraven, indented. 7 அதிகாரம் பெறுதல், to be invested with power, authority. (W.). 8. இறங்குதல், to decline after meridinal transits; to be near setting, as a heavenly body; to descend, alight, as a brid. 9. விலை தணிதல், to be low, as price. விலையைப் பதியக் கேட்டான். [உ. வ.] 10. அமைதியாதல், to be mild, gentle or tractalle; to become submissive, modest or humble. பையன் பள்ளிக் கூடத்திற் பதிந்திருக்கிறான். [உ. வ] 11. அஞ்சி யிணங்குதல் அல்லது பின்வாங்குதல், to quail, flinch.

பெயரெச்சம் : (Adjectival Participle)

இ. கா. பெ. பதிந்த நிலம், low land.

செயற்பெயரும் தொழிற்பெயரும் : (Gerund and Verbal noun.)

பதிதல், பதிகை, பதிவது, the act of registering, sinking etc.

பதிவு, registration, sinking etc.

தொழிற் பெயரும், தொழிலாகு பெயரும் : (Verbal noun and Metonymical verbal noun.)

பதி, 1. பதிகை, penetration, transfixion, thrust. " நுண்ணிலைவேல் பதிகொண்டு " (சீவக. 1186). 2. பதியம், Cluster of saplings planted temporarily. 3. நாற்று, Sapling for transplantation. 4. பதிவிளக்கு, Lamp fixed on a pot while exorcizing devils (W.). 5. உறைவிடம், abode, residence (திவா.), " பதியிற் கலங்கிய மீன் " (குறள். 1116). 6. வீடு, home, house (திவா.) 7. கோயில், temple (சங். அக.) 8. குறிசொல்லும் இடம். An oracular shrine, "பதியிருந்த பதியெல்லாம் பதிவாகச் சென்றேன்" (நாஞ். மருமக். மா.) 9. ஊர், town, city, village. " பதியெழு வறியாப் பழங்குடி" (சிலப். 1:15) 10. ஞாலம் (பூமி), the earth. (தைலவ. தைலவ.) 11. குதிரை, horse. (அக. நி.)

பதிவு. 1. அழுந்துகை, impression, indentation. 2. பள்ளம், Lowness of a surface; depression. நிலம் பதிவாயிருக்கிறது. [உ. வ] 3. பதியம். Cluster of saplings planted temporarily. விண்மீன்களின் சாய்வு. Declination of a heavenly body. (W). 5. எழுவதற்கு முன்னுள்ள திங்கள் (சந்திரன்) நிலை, Situation of the moon before its rise. (W.) 6. பதுக்கம், stooping. crouching, lurking as a thief or a beast ready to spring on its prey; ambush. 7. மனம் ஊன்றுகை, Engrossment, absorption in an object or pursuit. 8. கணக்குப் பதிகை, registering, entering, as in account. 9. பதிவு செய்யப் பட்டது. That which is registered. 10. பதியப் பட்டது. registry, entry. 11. தீர்மானிக்கப்பட்ட செலவு, Allotment, as in a budget. "இந்தக் கோவிலில் சங்கு ஊதுவதற்குப் பதிவு ஏற்படவில்லை" (நாஞ். உ. வ) 12. நிலைப்பு (நிலைவரம்), Permanence. "இந்தவூரில் அவன் பதிவாயிருக்கிறான்" [உ. வ.] 13. வழக்கம், Custom, habit. 14. அமைதி, submission. obedience, humility. "பதிவாய் நடந்துகொள்"[உ.வ.] 15. விலைத்தணிவு, Lowness of price (W.).

பதியம். 1. நாற்று முடியை இரண்டொரு நாட்குச் சேற்றிற் பதித்துவைக்கை, Temporary planting of a cluster of saplings in mud. 2. ஊன்றி நடுஞ் செடி கொடி கிளை முதலியன, slip, shoot, graft. 3. இலைப்பாசி, A species of duckweed. "செறியணிப் பதியத்திடை வளரிளஞ் சேல்கள்" (இரகு. நாட்டுப்.7).

பதியம்—பதிகம். "பதிகம் பரிக்குங் குழல்" [மறைசை. 17.)

திரிசொற்கள் : (Derivatives)

பதிவுகாரன், பெ. வாடிக்கைக்காரன், Customer.

பதி—பதம், பெ. 1. ஆழவேரூன்றும் அறுகம்புல், Bermuda grass [திவா.] 2. பதிவாக (பதுங்கி) இருந்து காக்குங் காவல், watch. (யாழ். அக.) 3. பதிவாக நகரில் திரிந்து ஆயும் மாறுகோலம்; disguise (யாழ். அக.) 4. மீன் வரும்வரை பதிவாக நிற்கும் கொக்கு, Crane (யாழ். அக.) 5, சூடு தணிந்த நிலை. Coolness. 6. ஈரம், dampness, moisture. [திவா.] "மாவெலாம்

பதம் புலர்ந்த" [கம்பரா. உயுத். மூலபல. 79]. 7. தண்ணீர் water [திவா.] 8. குளிர்ச்சியான கள், toddy. "பகிழ்ப்பதம் பன்னுட் கழிப்பி" [பொருந. 111]. 9. (மதுவின்) இனிமை sweetness, gentleness. "வெங்குரு வரசர் பதம்பெற வெழுதி" [திருவாலவா 38 : 40] 10. இன்பம், joy, delight [சூடா.]

11. வன்மை, சூடு முதலியன தணிந்து உண்பதற்கும் நுகர்தற்கும் ஏற்றநிலை (பக்குவம், வ.); Pooper Consistency, required degree of hardness or softness, proper quality or fitness. "சில்பத வுணவின்" [பெரும்பாண். 64]. 12. [வெந்து உண்பதற்கேற்ற] சோறு [திவா.] 13. அவிழ், A grain of boiled rice [சூடா.] 14. உணவு Cooked food [திவா.] "பதமிகுத்துத் துய்த்தல் வேண்டி" [சிலப். 28:189] 15. பொருள், thing, substance, wealth. ஒ. நோ. : கூழ் = உணவு, பொருள், [யாழ். அக.] 16. (பதமான) மென்மை, softness 17. இளம்புல், Tender grass [பிங்] 18. ஏற்ற சமையம். fit occasion, opportunity. "எண்பதத்தா லெய்தல்" (குறள். 991) 19. பொழுது, time (பிங்.) 20. நாழிகை, Indian hour of 24 minutes (திவா) 21. தகுதி, Suitability. 22. அழகு, beauty (W) 23. (தகுந்த) அளவை, measure (சங். அக.) 24 (தகுந்த) முயற்சி, effort (யாழ். அக.) 25. (கத்தியின் தகுந்த நிலையான) கூர்மை, Sharpness, as of the edge of a knife; கத்தி பதமாயிருக்கிறது. (உ. வ.) 26. (தகுந்த நிலையைக் காட்டும்) அடையாளம், Sign, symptom, indication (சங். அக.) பதஞ் செய்தல். செ.குன்றுவி. 1. பயன் படும்படி செய்தல், To make a thing fit for use. 2 பதப் படுத்துதல், to temper. 3. மெதுவாக்குதல், to soften. "குளிர்ந்து நின்று பதஞ்செயு நீர்" (சி. சி. 2:66) பதந்தவறுதல், செ. குன்றிய வி. 1. நிலையினின்று நழுவுதல், To slip down, as from one's position, 2. இரவில் வெள்ளி விழுதல், To fall, as a meteor by night (W.).

பதநிறம், பெ. ஊன்சிலை (மாமிசச்சிலை), A kind of black stone (யாழ். அக.)

பதநீர் (பாண்டி நாட்டு வழக்கு), பெ. தெளிவு (சோழ கொங்கு நாட்டு வ.), பனஞ்சாறு (சென்னை வ.), அக்கார நீர் (நாஞ்சில் நாட்டு வ.), புளிப்பேறுதபடி சுண்ணும்பு பூசப்பட்ட முட்டியிலிறக்கிய இனிப்புக்கள்;Sweet tooddy drawn in a pot lined with lime to prevent fermentation.

பதப்படுதல், செ. குன்றிய வி. 1. பருவமடைதல் (பக்குவப் படுதல்), To be seasoned. 2. பழுத்தல்,to ripen, 3. ஈரமாதல், to dampen, to moisten.

பதப்படுத்துதல், செ. குன்று வி. 1. பயன்படும்படி செய்தல்; To make a thing fit for use. 2. ஈரமாக்குதல், to dampen, to moisten. 3 இணக்குதல், to reconcile.

பதப்பாடு, பெ. 1. பருவமாகை (பக்குவமாகை) Being seasoned, tempered, fitted, adapted or trained (W.) 2. பழுக்கை. ripening (W). மதிலுறுப்பு, Component parts of a fortification including ornamental figures (பிங்.)

பதம்—பதன், பெ. Being fit for use.

பதனழிதல், செ. குன்றிய வி. பருவநிலை கடத்தல்; To become over-ripe, as fruits.

பதனிழிவு, பெ. பதக்கேடு; Over - ripeness; overboiled, decayed or rotten condition; debility (W.)

பதனிடுதல், செ. குன்று வி. தோல் முதலியவற்றைச் சீர்ப்படுத்துதல்; To tan; to temper, season, soften, mollify (W.)

பதன்—பதனம்.

பதனம்[1], பெ. 1. இறக்கம், descending, falling down [யாழ். அக] 2. தாழ்மை, humility (சங். அக.) 3. அமைதி, mildness, gentleness. பதனமானவன் (உ. வ) 4 கோள்களின் குறுக்குவரை; Latitude of planets 5. பிறப்போரைக்கு [சென்மராசிக்கு, வ.] ஆறும் எட்டாம் பன்னிரண்டாம் இடங்கள் [சங்.அக.]; Sixth, eightth and twelfth houses form the ascendant.

பதனம் ², பெ. 1. காப்புக் கவனம் [பத்திரம். வ.] Care, caution, attension circumspection; "பட்டணம் பதனம்" [இராமநா. உயுத். 23] பாதுகாப்பு, Safety, security, protection; "பதன கவசத்துடன்" [ஞானவா. சுக்கி. 19].

பதனம் — பதணம், பெ. 1. மதிலுண்மேடை, Mound or raised terrace of a fort, rampart [திவா:] "நெடுமதி னிரைப் பதணத்து" [பதிற்றுப். 22:25]. 2. மதில், Walls of a fort, fortification [W.].

பதம் ², பெ. 1. நிலத்திற் பதியும் உறுப்பாகிய பாதம், foot "எறிபதத்தா னிடங்காட்ட" [புறநா. 4]. 2. செய்யுளடி. Line of a stanza. 3. நாலிலொன்று, quarter [பிங்.]. 4. [பாதம் படுவதால் ஏற்படும்] வழி, way, road, path [திவா.] 5. [பதிந்து தங்கும்] இடம். place, site, location. "பதங்க ளேழும்" [தக்க யாகப். 147]. 6. பதிந்து தங்கும் வீடு போன்ற கட்டங்கள்; [Astrol.] Compartments drawn on a chart for determining the site for building a house [W.]. 7. பதிவாயிருந்து செய்யும் அலுவற் பதவி அல்லது வாழும் பதவி post, position, station, rank. "பிரிவில் தொல்பதந் துறந்து" [கம்பரா. அயோத், திருவடிசூட்டு. 101]. 8. பேரின்பப் பதவி; State of future bliss. "சிவபத மளித்த செல்வமே" [திருவாச. 37:3]. 9. தரம், status, capacity. "பெண்டிருந் தம்பதம் கொடுக்கும்" [புறநா. 151]. 10. வரிசை. [தரங்காட்டும்] வரிசை, row, order, series [பிங்.]. 11. பொன்னின் தரமான ஒளி, brilliance, brightness "பொற்-பதப் பொது" [கோயிற்பு. காப்பு].

பதம்—பதவு—பதவம், பெ. ஆழ்ந்து வேரூன்றும் அறுகு, Bermuda grass. "பெரும்பதவப் புல்மாந்தி" [கலித் 109].

பதம்—பதவு—பதவி.

பதவி ¹, பெ. 1. நிலை, Station, situation, position, rank. 2. வழி, way, path, road. [திவ். இயற். 2:89, அரும்.] 3. விண்ணுலகம், Worlds of the gods, lower states of bliss. "பதவியை யெவர்க்கும் நல்கும் பண்ணவன்" [கம்பரா. கிட்கிந்தா. வாலிவ. 136]. 4. வீட்டுலகம், Final states of bliss [பிங்.].

பதவி [2], பெ. பணிந்த நீர்மையுள்ளவன், Person of real humility; "பதவியாய்ப் பாணியானீ ரேற்று" [திவ். இயற். 2:89]

பதவு-பதவிது-பதவிசு, பெ அமைதி, mildness, humbleness. ஒ. நோ: நறுவிது-நறுவிசு.

பதவியது. பெ. 1. மெல்லியது, That which is soft or smooth [W.] 2. அமைதியானது, That which is mild or gentle [W.].

பதவியன், பெ. அமைதியானவன், Man of mild, amiable disposition [W.].

பதவு, பெ. 1. அறுகு, Bermuda grass "பதவு மேய லருந்து மதவுநடை நல்லான்" [அகநா. 14] 2. புல், grass. "பதவு காலங்களின் மேய்த்தும்" [பெரியபு. சண்டே. 26]. 3. புற்கட்டு, Bundle of grass [யாழ்ப்.] 4. புன்மை [புல்லின் நிலைமை], Insignificancy, smallness, triviality. "பதவிய மனிதரேனும்" [கம்பரா. சுந்தர. நிந்தனை. 71] 5. அமைதி, Mildness, gentleness [யாழ்ப்.]

பதவி-பதவை, பெ. வழி [திவா.]; [way, path] "கணைநுழைந்த வப்பதவை" [இரகு. திக்குவி. 205..]

பதம்-பாதம், பெ. 1. நிலத்திற் பதியும் காலின் அடிப் பகுதி; Foot, as of a person or animal. "பாதக் காப்பினள் பைந்தொடி." (சிலப். 14:23) 2. விளக்குத் தண்டின் அகன்று வட்டமான அடிப் பகுதி, Broad base of lamp - stand. 3. அடிச்சுவடு, foot-print. 4. காலடியளவு, foot-measure. 5. பெரியோர் முன்னிலை; Presence of a great person. "சதாசிவ தேவ மகாராயர் பாதத்திலே விண்ணப்பஞ் செய்து" (S. I. I. i, 70).

ஆரிய இலக்கியத் தொடர்பால், பாதம் என்னுஞ் சொற்குக் கால் என்றும் அடி என்றும் தவறான பொருள்கள் ஏற்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு வருமாறு:—

பாதம், பெ. 1. வினைப்பொறிகள் (கருமேந்திரியம்) ஐந்தனுள் ஒன்றாகிய கால். 2. பீட முதலியவற்றின் தாங்குகால்; Leg

support, as of an article of furniture. (W.) 3. செய்யுளடி, (Pros.) Unit of metrical measure; line of stanza. "வாங்கரும் பாதநான்கும் வகுத்த வான்மீகி" (கம்பரா. பால. நாட்டுப் 1.) 4. மலை, மரம் முதலியவற்றின் அடியிடம்; Base, as of a mountain, a tree (W.) 5. காற்பங்கு, Quarter (சூடா.) "புன்னைப் பீடத்தின் பாதங் குறைந்து" (மேருமந். 1172) 6. வட்டத்தின் காற்பங்கு; Quadrant of a circle. 7. வெள்ளிக்கால் (நட்சத்திர பாதம்); A fourth part of a duration of a naksatra 8 தொண்டு, வழிபாடு, ஓகம், ஓதி என்னும் நான்கு சிவசமய நெறி (சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்ற நான்கு சைவ சமய மார்க்கம்) — செ. ப. க. க. த. அ. (Madras University Tamil Lexicon.)

பாதக் காப்பு, பெ. 1. செருப்பு, Slippers, sandals, clogs(w). 2. திருவடிப் பாதுகாவல்; Protection at the feet of a great person. "பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின" (சிலப். 14:23).

பாதக் குறடு, பெ. குமிழ்கொண்ட கட்டை. மிதியடி; knobbed wooden sandals.

பாத கடகம் (பாதக் கடகம்), பெ. பாடகம், anklet (சூடா.).

பாத காணிக்கை (பாதக் காணிக்கை), பெ. 1. குருக்கொடை; Present to a spritual teacher laid at his feet. 2. சில ஊர்களில் புன்செய் நிலங்களுக்காகக் குடிகளால் குறுநில மன்னருக்குச் செலுத்தப்படும் ஒருவகை வரி; A money payment made in certain villages by ryots of drylands to their landlords.

பாதச் சாயை, பெ. அடிநிழல்; Human shadow.

பாத சக்கரம் (பாதச்சக்கரம்), செ. பாதத்தில் வரும் ஒருவகைப் புண்; A kind of festering sore in the foot.

பாத சாலகம் (பாதச்சாலகம்), பெ. காலணி வகை; A foot ornament. "பரந்த மேகலையுங் கோத்த பாதசாலகமும்" (கம்பரா. அயோத். கோலங். 12).

பாதசாலகம்-பாதசாலம் (பாதச்சாலம்) "பாதசாலத்த மென்கால்" (இரகு. நாட்டுப். 48).

பாத தாமரை (பாதத் தாமரை), பெ. திருவடித் தாமரை; Lotus - like feet.

பாததூளி (பாதத்தூளி), பெ. பெரியோர் அடிப்பொடி; Dust of the feet of great persons "ஏத்துவார்களுழக்கிய பாததூளி படுதலால்" (திவ். பெரியாழ். 4.4.6).

பாத பூசை (பாதப்பூசை), பெ. குரு முதலியோரின் திருவடிகளைக் கழுவி மலரிட்டு வழிபடுகை; Worshipping the feet of a religious preceptor or revered person by washing and adorning them with flowers.

பாத மயக்கு, பெ. அடிமயக்கு; பெ. 1. அடி முறை மாற்றக் கூடிய செய்யுள்; Stanza whose lines are capable of transposition. 2. வேறு புலவர் பாடிய மூவடிகளோடு தான் ஓரடி பாடி முடிக்கும் மிறைப்பா வகை; A kind of artificial stanza of four lines the first three of which are taken from works of other poets while the last is composed by the author. (யாப். வி. 96, பக். 504).

பாத முத்திரை, பெ. ஆசிரியன் திருவடிச் சுவடு; Imprint of a guru's feet (W.).

பாத மூலம், பெ. 1. குதிகால் heel, (யாழ். அக.) 2. வீடு பேற்றிற்கு காரணியமானதும் (காரணமானதும்) அடைக்கலமாகக் கருதப்படுவதுமான திருவடி; Feet of a deity or saint considered as the source of bliss and as a refuge. "நினையுமின் பிண்டிநாத னலங்கிளர் பாதமூலம்" (சீவக. 511).

பாத வெடிப்பு, பெ. பித்த வெடிப்பு; Fissure-foot.

பாதம்—பாதை, பெ. 1. ஒற்றையடி வழி; Foot-path, beaten track. 2. வழி, way, path, road (பிங்.). 3. முறை way, method, mode, manner.

பதி—வதி, செ. குன்றிய வி.

வதிகிறேன் (நி கா.), வதிந்தேன் (இ. கா.), வதிவேன் (எ. கா).

வதி—தல், செ. குன்றிய வி. 1. தங்குதல், குடியிருத்தல்; To stay, to dwell, abide; to sojourn. *"வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னூர்"* (பரிபா. 10 : 20). 2. துயிலுதல், to sleep. *"ஆற்று ணிணையுநள் வதிந்தக்கால்"* (கலித். 126).

வதி, பெ. 1. விலங்கு பறவை முதலியன தங்குமிடம்; lair, nest. *"மாவதி சேர"* (கலித். 119). 2. கால் பதியுஞ் சேறு, mire. *"செங்கயல் வதிக்குதி கொளும் புனலது"* (தேவா. 413:7). [பிங்].

கூட்டுச் சொல் : (Compound words)-

பதிபடை, பெ. மறைந்து நிற்குஞ் சேனை, Army lying in ambush (W.). பதிபடை-பதிப்படை. *"பெரிய திருவடியைப் பதிப் படையாக வைத்து வந்து"* (திவ். திருநெடுந். 23, வியா. பக். 213).

பதி மினுக்கி, பெ. (இடத்தைத் துலக்கும்) துடைப்பம்; Broom, as cleaning a place. (தைலவ. தைல.)

பதியஞ் சருக்கரை, பெ. ஒட்டும் பதத்திலுள்ள சருக்கரை; Molasses in a viscous condition (நாஞ்.).

பதியரி, பெ. நாற்று, Saplings for transplanting (அக. நி.).

பதியெழு-தல், செ. குன்றிய வி. வலசை போதல்; To flee from home or town from fear of the king or a hostile army.

பதியெழவு, பதியெழுவு, பெ. வலசைபோகை; Flight from home or town from fear of the king or a hostile army. *"பதியெழ வறியாப் பழங்குடி"* (மலைபடு. 479). *"பதியெழுவறியாப் பழங்குடி"* (சிலப். 1:15).

பதிவாளர், பெ. 1. ஆவணம், ஒப்பந்தம், சட்டதிட்டம் முதலியவற்றைப் பதிவு செய்யும் அரசியல் அலுவலர். Registrar of title-deeds, contracts, rules and regulations of corporations etc. (இக்கால வழக்கு). 2. பல்கலைக் கழக அலுவலகத் தலைவர்; Registrar of a University (இ. வ).

பதிவிடம், பெ. ஒளித்திருக்குமிடம்; Hiding place, ambush.

பதிவிளக்கு, பெ. பேயோட்டுதற்காகச் குடத்தின்மேற் பதிய வைத்த விளக்கு; Lamp fixed on a pot while exorcizing devils. (W.)

பதிவுச் சாப்பாடு, பெ. உண்டிச்சாலையில் மாதக் கணக்காக ஏற்பாடு செய்து உண்ணும் உணவு; Regular boarding at a hotel or mess on monthly account.

பதிவேடு, பெ. கணக்குப் பதியும் பொத்தகம்; register, account-book, ledger.

மரபு வழக்கு : (Idioms)

பதிபோடு[1]-தல், செ. குன்று. வி 1. நாற்று நடுதல், to transplant. 2. பதியம் போடுதல்; To plant, as slips; to insert, as grafts.

பதிபோடு[2]-தல், செ. குன்றிய வி. பதுங்குதல், to crouch. புலி பதிபோடுகிறது. (உ. வ.).

பதிவிரு-த்தல், செ குன்றிய வி. ஒளித்திருத்தல்; To lie in wait, as a thief or an enemy; to lurk, as a beast ready to spring.

பதிவுவை-த்தல், செ. குன்று வி. 1. கணக்கிற் பதிதல்; To enter in an account. 2. வாடிக்கை வைத்தல்; To become a customer of a shop.

பதிவை-த்தல், செ. குன்று வி. பதிபோடு[1] என்பதைப் பார்க்க.

பிறவினை (Causal verb) — 15-ஆம் புடைபெயர்ச்சி.

பதிக்கிறேன் (நி.கா.), பதித்தேன் (இ.கா.), பதிப்பேன் (எ.கா.).

பதி-த்தல், செ. குன்று வி. 1. அழுத்துதல், To imprint, impress, stamp, engrave, as in mind; to plunge. பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி (திருவாச. 11:12). 2. மணி முதலியன இழைத்தல்; to infix, in sert, in graft, inlay, as gems; to enchase. 3. கற்பாவுதல்; To pave, as floor with bricks or stones. 4. தாழ்த்துதல், To lower height, price, etc; to set

lower, insert deeper. 5. பதியம் போடுதல்; To plant a cluster of saplings temporarily in mud; to plant a shoot, runner or ereeper. 6. அச்சிடுதல், to print, reprint, edit. 7. எழுதுதல், To inter in a register. 8. அதிகாரங் கொடுத்தல்; To invest with power, authority or prerogative (W.)

தொழிற் பெயர் : (Verbal noun)

பதித்தல், பதிக்கை, பதிப்பு.

தொழிலாகு பெயர் : [Metorymical verbal noun]

பதிப்பு, பெ. Edition

கூட்டுச் சொல் : [Compound words]

பதி சித்திரம். பெ. கோபுரப் படிமை; Images adorning a temple tower. [கோயிலொ . 122.].

பதிப்பகம், பெ. 1. அச்சகம், Printing Press.
2. வெளியீட்டகம், Publishing House.

பதிப்பாசிரியர், பெ. Editor.

பதிப்பாளர், பெ. பதிப்பாசிரியர்.

மரபுவழக்கு : [Idiom]

பதித்தெழுது-தல், செ. குன்று வி. 1. அழுத்தி யெழுதுதல்; To write forming a deep impression. 2. மேலே இடம் விட்டுக் கீழே யெழுதுதல்; To write in the lower half of a page leaving space at the top.

முலமும் திரிவும் . [Origin and Derivation]

பள் - படு - படி - பதி. பள் - பள்ளம்.

படுதல் = தாழவிழுதல், விழுதல், தொடுதல், பதிதல்.

படுத்தல் = பள்ளமாதல், தாழ்தல், விழுதல், படுக்கையாய்க் கிடத்தல், பதிதல், பதிவு செய்தல்.

படிதல் = தாழ்த்தல், கீழ்ப்படுதல், பணிதல், பதிதல்.

பதிதல் = ஆழ இறங்குதல், பொறித்தல், பதிவு செய்தல்.

இனச் சொல் : [Cognates and allied words]

I திரவிடம்:

மலையாளம்—பதி, பதிவு.

பதிக்க, to impress. பதியுக, to be impresed, be pressed down. பதி, being fixed in, presed down. பதிவு, settlement, custom.

பதம், softness, elasticity, yielding temper. பதம, பதும, pliancy. பதர்ம்ம, rottenness of rice through damp, softness of mind. பதுக்க, to be soft, tender, pliable. பதுப்பு, softness. பதுப்பிக்க, to soften, பதம், the right degree of ripeness, temperature, etc.

தெலுங்கு—பதனு, பதுனு, moisture, dampness, wetness; ripeness maturity temper.

கன்னடம் — பத, Proper or good state or condition, proper degree or temperature, the seasoning of any food, the right degree of ripeness,keenness of edge or sharpness ஹத, porper condition.

துளுவம்—பதனுனி, பதணுனி, to become soft.

குடகம்—பத soft .

கோத்தம்—பத்ம், temper of iron.

மாலத்தம்—பெத்கெ, to be soft. பதோ, sharp.

குவீ—பெதெ, soft and damp.

பிராகுவீ—புதேன், cold, cool. புதீ, coldness, frost.

2. ஆரியம்:

பதனம்—வ. (Skt.) பதன.

பதவி—வ. (Skt) பதவீ.

பதம்—பாதம்—வ. (Skt.) பத, பாத. Gk. pod. L ped, pedis, OE, OS fot, OHG fuoz, ON fotr, Goth. fotus, E foot.

பாதை—OE poeth, OLG pad, OHG pfad, E path. சமற்கிருதத்திற் பாதை என்னும் சொல் இல்லாதது கவனிக்கத்தக்கது. பத என்னும் சொல்லே அதிற் பாதையைக் குறிக்கும்.

Ped என்னும் இலத்தீன் சொல்லினின்றே, pedal, pedate, pedestal, peduncle என்னும் சொற்கள் திரிந்துள்ளன.

வதி—வசி—வ. (Skt) வஸ். இவ்வடசொல்லே ஆங்கிலத்தில் was என்னும் இறந்த காலத்துணைவினைச் சொல்லாகத் திரிந்து வழங்குகின்றது.

"Was. - The O. E. Wesan, to be, is cognate with Goth, Wisan; O. N. Vera, to be, abide; Sansk. Vas, to dwell." (P. 266).

"Were = O. E. woeron, where is for original S." (P 267)

என்று இரிச்சார்டு மாரிசு (Richard Morris) தம் 'ஆங்கிலச் சொற்றிரிபு வரலாற்றுச்சட்டகம்' (Historical Outlines of English Accidence) என்னும் நூலில் வரைந்திருத்தல் காண்க. இவ்விறந்த காலத் துணைவினைச் சொல் மட்டுமன்றி, is, are என்னும் நிகழ்காலத் துணைவினைச் சொற்களும் 'இரு' என்னும் தமிழ்ச்சொல் திரிபே என்பது, என் 'A Guide to Western Tamilologists' என்னும் ஆங்கில நூலில் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பெறும்.

தமிழ்த் தகரம் வடமொழியில் ஸகரமாகத் திரிவதை மாஸ என்னும் சொல்லாலும் உணர்க. மதி-மாதம்-மாஸ(வ.)-மாஸ்(இ.).

சிறப்புக் குறிப்பு :— பத, பாத என்னும் சொற்கள் வடமொழியில் வழங்குவதால், தமிழ்ப் புலவர் பலர் அவற்றை வடசொல்லென்றே மயங்கி அடி என்னும் சொல்லைப் பாதம் என்னும் பொருளில் ஆண்டு வருகின்றனர். அடி வேறு; பாதம் வேறு. அடி என்பது ஒரு பொருளின் அடிப்பகுதியையும் ஓர் உயிரியின் காலையும் பாதத்தையும் குறிக்கும் பொதுச் சொல். எ - டு: அடித்தட்டு, மயிலடி, திருவடி. அடிப் பகுதி யென்பது கீழ் இடத்தையும் கீழ்ப் பொருளையுங் குறிக்கும். எ-டு: பந்தலடி, தேரடி, சிறிய திருவடி, பெரிய திருவடி. மரவடி என்பது கால்போன்ற அடிமரம். பாதம் என்பதோ நிலத்திற் பதியும் பரந்த அடியுறுப்பையே அல்லது

பகுதியையே குறிக்கும் சிறப்புச் சொல். எ-டு: பாதத் தாமரை பாதம் வைத்த விளக்கு. ஆகவே, பதிதல் என்பதை வேர்ப் பொருளாகக் கொண்ட பதம், பாதம் என்னும் இரு சொற்களும் தூய தென் சொல்லேயென்றும், அவையே முறையே பத, பாத என வட மொழியில் திரியும் என்றும், அறிக. இனி பாதம் படுவதால் ஏற்படும் வழியைக் குறிக்கும் பாதை யென்னும் சொல், ஆங்கிலத்தில் (Path என)இருப்பதையும் வடமொழியில் இன்மையையும் நோக்குக.

வஸ் (வசி), என்னும் சமற்கிருத வினைச் சொற்கும், அதன் திரிவான 'was' என்னும் ஆங்கில இறந்த கால வினைச்சொற்கும், வதி என்னும் தமிழ்ச்சொல் மூலமாயிருப்பதினின்று, தமிழின் தொன்மையையும் முன்மையையும் அறிக.

திருத்தம் :- பதம், பாதம், பதவி, பதனம் என்னும் தென் சொற்களின் திரிவான பத, பாத, பதவீ, பதன என்னும் வட சொற்களை, அவற்றின் மூலமான தென்சொற்கட்கே மூலமெனச் சென்னை யகர முதலியிற் குறித்திருப்பது, மூலவழு என அறிக.

கவனிப்பு.

செ. சொ. பி. அ. போலிகை யுருப்படிகள். அவ்வகர முதலித் திட்டவுறுப்பினர் அவ்வகரமுதலி யமைப்பை ஓரளவு அறிந்து கொள்ளுமாறே 'தென்மொழி'யிற் காட்டப்படுகின்றன. உண்மை யான அகரமுதலி எல்லாவகையிலும் மிக விரிவாகவும் விளக்க மாகவும் வரும் என்பதை அறிதல் வேண்டும். ஆகவே, புலவர். அடல் எழிலனுர் விடுத்த எச்சரிக்கை மடலை உண்மையில் உட் கொள்ளாவிடினும், நடைமுறையில் உட்கொண்டதாகவே முடியும் என்பதை இறுதியில் அனைவரும் அறிவர். இஃது, அவர் குறித்த "அரைவேக்காட் டாராய்ச்சியாளரும்" "பச்சை வெட் டாராய்ச்சி யாளரும்" மேலதிகாரிகளையும் நாட்டுமக்களையும் ஆரியரைப் போன்றே ஏமாற்றி வரும் பயனில் முயற்சியை, உடனே விட்டொழியுமாறு யான் விடுக்கும் எச்சரிக்கைக் குறிப்பாகும்.

— ஞா. தேவநேயன்.

முந்தின 'தென்மொழி' இதழில், செ. சொ. பீ. அகரமுதலிப் போலிகை யுருப்படிகளில் விடுபட்டுப்போன பகுதிகளும் திருத்தங்களும்.

1. அ

எழுத்து

சொல்வகை—அங்காத்தலால் ஒரு மாத்திரை யளவொலிக்கும் அஃறிணைச் செவிப்புலப் பொருளாகிய தற்சுட்டொலிப் பெயர்.

சொல்லுறுப்பு

அ[22] a, உகரமுதல் திரிபு

சொல்லாக்கத்தில் உகரமுதல் அகர மூதலாகத் திரிவதுண்டு எ-டு: உகை (செலுத்து) - அகை, குட்டை - கட்டை, குடும்பு - கடும்பு, குடை (தல்) - கடை (தல்), சுரி (வளையல்) - சரி, துளிர் - தளிர், துணை - தனை (எத்துணை-எத்தனை, வருந்துணையும்-வருந்தினையும்), நுரை (வெண்மை)-நரை, புரி-பரி (வளை), புரம் (உயர்ந்த இடம் அல்லது கட்டிடம், எ-டு: பரவெளி, கோபுரம்)— பரம் - வரம் - வரன் (மேலான வீட்டுநிலம்), முடங்கு- மடங்கு, முடி-மடி (இற), முயங்கு-மயங்கு.

இத்திரிபினால், சில சொற்களின் மூலத்தையும் சில சொற்களைப் புணையும் வகையையும் அறியலாம்.

2. அவரை

இயல் விளக்கம்

"இவர் கொடியில் காய்ப்பதும்" என்பதை நீக்கிவிட்டு, 'ஊர் கொடியாகவும் (Creeper) சிறப்பாக இவர் கொடியாகவும் (Climber) படர் கொடியிற் காய்ப்பதும்'

என்பதைச் சேர்த்துக் கொள்க.

சொல்வகை — அஃறிணி ஓரறிவுயிர்ப் பொருட்பெயர்.

சொல்லமைவு — 'அம்' வேர், அல்லது அடிமுதனிலை. 'அவல்' அமல் என்பதன் திரிபாகி, மேன் முதனிலையாக நிற்கும் தொழிலாகு பெயர். 'ஐ' பண்டபீறு. லகரம் ரகமானது போலித்திரிபு.

இணைமொழி

'அவரை-துவரை' என்பதில் இடைக்கோட்டை நீக்கிவிடுக

3. இஞ்சி

வழக்கிடம்—இஞ்சி¹ – இலக்கியம்

இஞ்சி² – தமிழகம்

சொல்வகை-இஞ்சி¹ – கட்டிட வடிவான இடப்பெயர்

இஞ்சி² – அஃறிணை ஓரறிவுயிர்ப் பொருட்பெயர்.

ஆட்சிமேற்கோள் :

இஞ்சி ¹. "செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி" (கம்பரா. யுத்த. 160).

செ. சொ. பி. அகரமுதலியில் இன்னும் எண்மேற்கோள் காட்டப் பெறும். விரிவஞ்சி அவை இங்கு விடப்பட்டுள.

கூட்டுச் சொல் :

இஞ்சித்தேறு = இஞ்சித்துண்டு; Small piece of green ginger.

இஞ்சியூறுகாய் = காயச் சரக்குச் சேர்த்து எண்ணெயில் ஊறவைத்த இஞ்சி; ginger-pickle.

இஞ்சிச்'சுரசம்' என்பதை இஞ்சிக்கருக்கு என்றும், இஞ்சி 'முரப்பா' என்பதை இஞ்சி வடிப்பு என்றும், சொல்லலாம்.

சொல்லமைவு :

இஞ்சி (இரண்டிற்கும் பொது). 'இள்' வேர். 'இஞ்சு' முதனிலை. 'இ' வினைமுதலீறு.

திருத்தம் :

இத்தலைப்பின் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள அகரமுதலிகளின் ஆங்கிலப் பெயர்களெல்லாம் செ. சொ. பி. அகர முதலியில் தெளிவாகக் குறிக்கப்பெறும்.

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்

உறுப்பினர் பட்டியல்.

திருவாளர்கள்;— 1. தாமரை பெருஞ்சித்திரன், *கடலூர்-1.* 2. மா. பூங்குன்றன், *கடலூர்-1.* 3. புலவர் இறைக்குருவன், *மதுரை-10.* 4. இறை. பொற்கொடி, *மதுரை-10.* 5. காளியப்பன் (நாராயணன்) *நெய்வேலி-1.* 6. செ. பன்னீர்ச்செல்வம், *சென்னை-2.* 7. த. வளங்கோ, *புதுவை-1.* 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி. எசி.) *சென்னை-25.* 9. கி. மகிழ்கோ, *புதுவை-5,* 10. திருநாவுக்கரசு பொ. இ. *வேலூர்-9.*

11. புலவர். சா. அடல் எழிலன், *திருவையாறு.* 12. நா முத்துக்குமரன், அறி இ. ஆ ப., *குளத்துப்பாளையம்.* 13. திருச்சி மாவட்டத்தான். 14. ந செங்குட்டுவன், *திருச்சி-14.* 15. அருண்மொழியன், *திருச்சி-14.* 16. வே. நா. பொற்செழியன், (வே. நா. இரேணுகோபால்) *பெங்களூர்-1.* 17. உணர்வுப் பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) *திருச்சி-10.* 18. உளங்கவரழகன் *இராசிபுரம்.* 19. நாவை-சிவம் (தமிழ்மகன்) *கீரனூர்.* 20. ச. கலியமூர்த்தி, *காவேரிநகர்.*

21. வே. மாறன், *பெங்களூர்-21.* 22. சி. பூ. மணி, *பெங்களூர்-21.* 23. கா. அப்பாத்துரை, *நடுப்பட்டி.* 24, ச சின்னத்துரை, *நெய்வேலி-1.* 25. அன்புவாணன், (த. கோவிந்தன்), *நெய்வேலி-1.* 26 அ. அருள்நெறி, *நெய்வேலி-2.* 27. ஆ. கருப்பையா, *நெய்வேலி-3.* 28. இரா. அப்பாவு, *நெய்வேலி-3.* 29. இரா. பெருந்தேவன், *நெய்வேலி-2.* 30. மு. அறவாழி, *நெய்வேலி-1.*

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), *நெய்வேலி-1.* 32. தமிழநம்பி, *அறங்கண்டநல்லூர்.* 33. புலவர். பா. வீரப்பன், *ஆனைமலை.* 34. நா. இளமாறன், *பெரும்பகல்லாக்குடியிருப்பு,* 35. க. மலர்ச்செல்வன் (தனராசன்), *மதுரை-1.* 36. பர். பொ. இளங்கோ, *உக்கரம்,* 37. செ. பெரிய நாடார், *தெற்குச்சூரன்குடி.* 38. சே. கு. அரசங்கோவன், *மேட்டூர் அணை-1.* 39. ஞா. தாமசு, *மணிமுத்தாறு* 40. கே. பூபதி, *பெங்களூர்-16.*

41. துரை. சம்பத்குமார், க. இ. *ஈரோடு-1.* 42. அறவாழி• *தளவாய்ப்பட்டணம்.* 43. இல. க. இரத்தினவேல், *திருச்சிராப்பள்ளி-1.* 44. சு. திருஞானம், *திருச்சிராப்பள்ளி-1.* 45. கே. ஏ. மணவாளன், *பெங்களூர்-5.* 46. இர. பரணன், *பரணம்*

47. மு. வ. பரமசிவம், *நடுப்பட்டி*. 48. ம. சோசு, *உத்தமபாளையம்*. 49. மு. திருநாவுக்கரசு, *அண்ணாமலை நகர்*. 50. க. இராமசாமி, *கோவில்பட்டி*.

[51] ஓ. பிச்சை, *தெற்குத்தெரு, மேலூர்*. [52] இல-வேலரங்கன், *சோமையனூர்*. [53] செம்பீரம், *பெங்களூர்-1* [54] செ. பெருமாள் *கடத்தூர்*. [55] புலவர். வெ. அரி அரன், *ஒண்டிப்புதூர்*. [56] ந. தேவராசன், *வேலூர்-1*. [57] க. செகநாதன் பி. எசி. *ஈரோடு*. [58] பெ.ச. இராசமாணிக்கம். *காரைக்குறிச்சிப்புதூர்*. [59] வெ. கிழார். *பெங்களூர்-21*. [60] சா. பொழிலன், *நெய்வேலி-2*.

[61] கா. சே. சாத்தப் பிள்ளை, பி. எசி. பி. டி. *ஆமூர்*, [62] புலவர். கா. இளமுருகன், *புன்செய்ப்புளியம்பட்டி*. [63] ப. கு. முருகவேள், *புன்செய்ப்புளியம்பட்டி* [64] புலவர். ந. அருணன், *எரங்காட்டுப்பாளையம்*. [65] பா. அறவாழி, *சென்னை-7*. [66] அ. வெள்ளிமலையார், *திருச்சிராப்பள்ளி-8*. [67] சாலை. இளந்திரையன், எம். ஏ. எம். லிட், *புதிய தில்லி-5* [68] செ. வெற்றிவேந்தன் (செயராசன்) *நீலமலைத்தோட்டம்-இராசிபுரம்* [69] முல்லைவாணன், *சிங்கை*. [70] ந. இராசகோபாலன், *தஞ்சாவூர்-1*.

[71] அகத்தி கிருட்டிணன் இ.அ. (வேளாண்), சோளிங்கபுரம். [72] ஏ. கே. மணி, பி. இ ஏ., எசு. எசு, । பெங்களூர்-38 [73] வே ஐயனப்பிள்ளை, வேம்பனூர். [74] வ. கௌரிநாதன், *திருச்சி-14*. [75] எழிலரசன், *திருச்சி-14*. [76] பொன்-தங்கவேலன், பெங்களூர்-15. [77] தி. எழிலரசன் (இரமணி), மதுரை-3 [78] பொன்-மாறன் (இராமகிருட்டிணன்), மதுரை-3. [79] மறை. நித்தலின்பன், கோவை-12. [80] தமிழ்க்கூத்தன், *கருந்திட்டைக்குடி*.

[81] புலவர். ச. தமிழ்வேலன், மீனாட்சிபுரம் [82] அ இளங்கோ, பி. எசி பி. டி. பெருமாம்பாளையம். [83] புலவர். த. மாணிக்கம், கூகலூர். [84] புலவர். திரு. மாரி விசுவநாதன், வால்பாறை. [85] பா. வளன்அரசு, க மு. திருநெல்வேலி-2. [86] கரு. பேச்சிமுத்து, *திருச்சி-14*. [87] அ. சாமிக்கண்ணு, அரூர். [88 கே. அரசு, பெங்களூர் 21. [89] ந. சுப்பையா, அருமடல். [80] த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

[91] த வையாபுரி, ஆனைமலை. [92] எசு. கே. எசு காதர், அம்பாலா. [93] இர சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்.

[94] அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். [95] வை வேதையன், திருவாரூர். [96] த. சரவணத் தமிழன், திருவாரூர். [97] மா இறைவன், திருச்சி-14. [98] த அன்பழகன், கடலூர்-1. [99] பெ. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. [100] பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

[101] க. நாராயணன், பெரும்பகல்லாக்குடியிருப்பு. (102) வி. இராசமாணிக்கம் எம்.ஏ. கோயமுத்தூர்-18. [103] மு. கதிரவன், நெமலி [104] அ. கிருட்டிணசாமி, பெங்களூர்-21. [105] துரை-தெட்சிணாமூர்த்தி, மேலச்செம்மங்குடி. [106] க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம். [107] அரங்க-திருமாறன், புதூர், உரத்தநாடு. [108] க. அன்புமணி, திருச்சி-15. [109] கரு. நடவரசன, நெய்வேலி-3. [110] இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

[111] ப. துரையரசன், கைகாட்டிப்புதூர். [112] கோ-நிலவழகன், க. மு. சென்னை-30 [113] க.சி. அகமுடைநம்பி, பி. இ., மதுரை. 114] சு. வலங்கைப்பாண்டியன், மதுரை. [115] சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை. [116] பொன். இராமானுசம், சுத்தமல்லி. [117] நெல்லை சு. மணியன், திருச்சி-2. [118] முத்து-செல்வன், அலசூர், [119] ஆ. ப. தொல்காப்பியன். மொ. ஆலமரத்துப்பட்டி. [120] இரா. தங்கராசன், மாரம்பாடி,

(121) ப. பெரியசாமி, விருதுநகர். (122) பழங்கரைவேள், பழங்கரை. (123) இந்திய வான்படைத் தமிழன்பர்கள், (124) உ.த.க.பெங்களூர் நகரககிளை. (125) செ. தென்னவன் கவுண்டன் பாளையம். (126) காரை-இறையடியான், காரைக்கால் (127) காரை-அலீம், காரைக்கால். (128) தே நே. சித்திரச்செல்வி, ஆரூர். (129) புலவர் இ. தேவநேயச்சித்திரன்,;கீ.அ. செங்கழுநீர்ப் பட்டு. (130) வே. மு. பொதிய வெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

(131) ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். (132) த. முத்துக்குமரன், க. இ பாம்பூர். (133) ஆர். வேணுகோபால், புதுவை-1. (134) இரா. செயராமன், நெய்வேலி-2. (135) திருவாட்டி. வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம். (136) தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி-1. (137) மு. இளம்பரிதி, உரத்த

நாடு. *(138)* ப. இளம்வழு ,உரத்தநாடு. *(139)* நா. இள முருகன், அறி. இ. ஆ. ப. நீடாமங்கலம். *(140)* பி. என். அப்பாசிக் கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

(141) சிங்கை. செங்கோடன். அம்மாப்பேட்டை, தஞ்சை. *(142)* இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம். *(143)* அ. தங்க. ராசன், ஈப்போ, மலேசியா. *(144)* கு. அண்டிரன், நாயனூர் பாளையம். [தெ.ஆ.] *(145)* ப. தாயம்மாள் அறவாணன்,சென்னை29. *(146)* ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா, *(147)* பெ. புதுமைப் பிரியன், மலாக்கா. *(148)* புலவர். ஞா. நன்முல்லை, விரியூர். [தெ. ஆ.] *(149)* இரா. வெற்றியரசு, நெய்வேலி—1. *(150)* ப. நன்முல்லை, சிங்கை.

(151) இரா அருட்குவை, நெய்வேலி-3, *(152)* அ. குமணன், சிங்கை. *(153)* இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர்-16. *(154)* துரை. அருண்மொழி, நெய்வேலி-1. *[155]* செ. மேதலைவன், நெய்வேலி-3. *[156]* த. செகந்நாதன், அம்பாலாப்படைவீடு. *[157]* இறைவாணன். சிங்கப்பூர். *[158]* ப தண்டபாணி, கான்பூர். *[159]* கே.கணபதி, மலேசியா. *[160]* புலவர்.குமர. தன்னொளியன், கண்ணமங்கலம். (வட. ஆ. மாவட்டம்.)

[161] ஏ. செல்வராசு, கான்பூர்-8. *[162]* இ. செந்தமிழ்ச்சேய் பொறி. இ, அரசூர்-தெ ஆ. மாவட்டம். *(163)* கி. சீதாராமகுப்தா உடுமலைப்பேட்டை. *[164]* ம. துரைசாமி, பீடோங்-மலேசியா. *(165)* எம். ஏ. இளஞ்செல்வன், [எம். இராமு] பீடோங்-மலேசியா. *[166]* பெ. அரசு, மலாக்கா. *[167]* இரா.காளிமுத்து, கோலாலம்பூர். *168.* மருத்துவர். சி. இராமச்சந்திரன், சேலம். *169* பி. இலக்கு வன், குவைத்து. *170.* புலவர். கா. சு. சண்முகம், பல்லடம்.

171. புலவர். ப. சுப்பையன், நாச்சிபாளையம். திருப்பூர். *172.* புலவர். திருமேனி, (நாகராசன்) காரைக்கால். *173.* காரை-அறவாழி, காரைக்கால். *174* மு. துரைசாமி க. மா. சு. சுலுத்தான் பேட்டை, பல்லடம். *175* க. தமிழப்பன், அர. குருசாமி சி. கிருட்டிணசாமி, அ. அரங்கசாமி-திருப்பூர்-2. *176.* சி. அறிவுறுவோன், அம்மையகரம்.

ஒரு புரளி மறுப்பு.

செந்தமிழைச் செவ்வையாய் வளர்த்தற்கு என் அரைநூற்றாண்டாராய்ச்சி யறிவையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு பர். மெ. சுந்தரனார் எத்துணையோ எடுத்துக்கூறியும், காலஞ்சென்ற அறிஞர் அண்ணாத்துரையார் அதைக் கடுகளவும் பொருட்படுத்தியிலர். அதுவுமின்றி, என்னை ஓர் ஆராய்ச்சிப் பணியலமர்த்த என் அகவை கடந்து விட்டதென்றும், ஒரு மாணவரிடங் கூறியுள்ளார்.

அவர் காட்டிய வழியையே கடைப் பிடிக்கும் கலைஞர் கருணாநிதியாரும், என் அறிவைப் பயன்படுத்துவதிற் கவனஞ் செலுத்தவில்லை. சில அன்பர் கருத்திற் கிணங்க, பேரா. சொக்கப்பனாரைத் தலைவராகக் கொண்ட ஒரு தூதுக்குழு, என் மூச்சொற் போலிகையுருப்படிகளுடன் சென்று முதலமைச்சரை அவர் பணித்தவாறு மும் முறை கண்டு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி யொன்றை என்னைக் கொண்டு தொகுப்பிப்பதன் இன்றியமையாமையைப் பலபட விளக்கிக் கூறியும், அதை ஒரு குழுவினிடமே ஒப்படைக்க வேண்டுமென்று முடிவு செய்து விட்டார்.

அதன் பின்னரே, பெருஞ்சித்திரனார் தம் செ. சொ. பி. அகரமுதலித் திட்டத்தை வகுத்து, 'தென்மொழி'யில் வெளியிட்டார். அஃது இறைவன் ஏற்பாடாதலால் வெற்றியாக முடிந்தது. ஆயின் யாரோ ஒரு கலக விருப்பினரான ஊமைக் குறும்பினர், கலைஞர் எனக்கு மாதம் ஆயிரத்தைந்நூறு உருபா அளித்து அவ்வகரமுதலியைத் தொகுப்பிக்க இருந்ததாகவும், பெருஞ்சித்திரனாரே பர். மு. வ. மூவாயிரம் வாங்கும் போது நீங்கள் அதிற் பாதி வாங்குவது இழுக்கென்று தடுத்துத், தம் பெயர் விளங்குமாறு ஒரு திட்டம் வகுத்து விட்டதாகவும், ஒரு கதை கட்டிப் பரப்பி வருவதாகத் தெரிகின்றது. இது பொறாமை கரணியமாக விளைந்த முழுப் புரட்டென்றும், தமிழ்ப் பகைவரின் தன்னலச் சூழ்ச்சி யென்றும் அறிந்து கொள்க.



ஒரு வேண்டுகோள் விளம்பரம்.

ஆங்கிலேய வரசுக் காலத்தில் வெளிவந்த மாவட்டத் திணைக்களஞ்சியங்களுள் (District Gazetteers), மதுரை முகவை, திருச்சி, கோவை, தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்கட்கும்; பேராய அரசுக் காலத்தில் வெளிவந்த மாவட்டத்திணைக் களஞ்சியங்களுள், சேலமும் கோவையும் தவிரப் பிறவற்றிற்கும், உரியவை எனக்குத் தேவை. அவை இன்று கடைகளிற் கிடைத்தில. யாரேனும் அவற்றுள் ஒன்றோ பலவோ வைத்திருந்து நேர்மையான விலைக்கு விற்பாராயின், தமிழுக்குச் செய்த பெருந் தொண்டாகும். விலையை நான் ஒப்புக்கொண்டபின், கட்டிப் பேற்றஞ்சலில் (V. P. P) விடுப்பின், உடனே பணவிடை செய்யப்படும்.

— ஞா. தேவநேயன்.

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம் :	9 உருபா.	10-50 உருபா.	14 உருபா.
தனி இதழ்:	75 காசு.	90 காசு.	1—10

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3·00	6-00	4·00
தனியிதழ் ,,	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

'தென்மொழி'க்கு நன்கொடை.

3-9-69 முதல் 8-10-69 முடிய, தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையால் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உருபா.
புதுவை திரு. த வளங்கோ வழி புதுவை அன்பர்கள், திரு. த. வளங்கோ	5—00
திருவாளர்கள்:- க. கந்தசாமி. வை. ஆலால சுந்தரம், ஆதிநாராயணன், பிரசன்னு, பவானி, சக்கரபாணி (தலைக்கு 2 உருபா மேனி)	12—00
திருவாளர்கள்:- க. நடராசன், பழனியப்பன், கணேசன், தியாகராசன் (தலைக்கு ஓர் உருபா மேனி)	4—00
திருவாட்டி. திலோத்தமை	1—00
திரு ந. முத்துக்குமரசாமி, அரசினர் உயர் பள்ளி, பல்லடம்.	5—00
திரு கொ. சி. வேலுச்சாமி, மொரசப்பட்டி, சேலம் (மா. வ)	2 00
திரு. எழில் மாறன், நரிக்கல்பட்டி, (பழனி வட்டம்)	2—00
திரு. மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	5—00
எசு. கே. எசு. காதர், நாகபுரி-5.	1—00
திரு. அரிஅரன், அரசினர் ஆண்கள் பள்ளி, கோவை-16.	4—00
ஏ. இரெக்சு. வான்படை; 56. ஏ. பி. ஓ.	10—00
திரு. வி. சீத்தாராமன், ஆதனூர்.	1—00
ப. தனஞ்செயன், சென்னை-33.	1—00
எசு. கே. பழநிசாமி, செம்பனூர், (முகவை மாவட்டம்)	1—00
திரு. ம. ஆரோக்கியதாசு (வளங்கோ) பாலக்குறிச்சி (திருச்சி மாவட்டம்)	4—25
திரு. பொன். இராமகிருட்டிணன், மதுரை-3	1—00
திரு. வே. காந்தி, டி. எம். இ., திண்டுக்கல்-3	1—00
திரு.ம.சி.கிருட்டிணமூர்த்தி; இராசேந்திரம், (திருச்சி மா.வ.)	3—50
மயிலை திரு. தி. கு. அன்பரசன் வழி, சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள்;	35—00
ஏ. இரெக்சு, வான்படை, மே/பா. 56 ஏ. பி. ஓ.	10—00
திரு. அறவாழி, பெங்களூர்-16.	3—50
திரு. மு பி. முத்து (சேரலாதன்) பெங்களூர்-16.	3—50
திரு. விசுவநாதன் (மணிமாறன்) பெங்களூர்-16.	1—00
திரு. மனோகரன் (தூயவன்) பெங்களூர்	2—00

(தொடரும்)

முதுமையைத் தவிர்க்க முடியுமா?

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

—செ. பன்னீர்ச்செல்வம்

5. 'மருத்துவர் 'கிளைவ் மெக்கே' என்னும் கார்னல் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த உணவூட்டத்துறைப் பேராசிரியர், "முதுமை எய்துதலின் உயிர் வேதியல் கொள்கையை அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் உணவு முறைமையை ஒழுங்குபடுத்திக் கொள்வதினாலும், வாழ்க்கை முறையைத் தகுந்தவாறு அமைத்துக் கொள்வதினாலும், வாழ்நாட் பேரெல்லையை வெகுவாக நீட்டித்துக் கொள்ளலாம்" என்றுரைக்கின்றார்.

6. மருத்துவர், கோரென்சவுகி என்பவர், "உறக்கம் அல்லது களைப்பு இவற்றோடு தொடர்புடைய நச்சுப் பொருள்கள்தாம் முதுமையடைதலுக்குத் துணை செய்கின்றன. பொதுவாக விழிப்புநிலை வாழ்வில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலைமைகளே, இத்தகைய நச்சுப் பொருள்கள் சேர்ந்துபோதலுக்குக் காரணியமாக உள்ளன. இச்சேர்மானம், உள, உணர்வு அழுத்தங்களாலும், கவலைகளாலும், மிகைப்படுத்தப் படுகின்றது. இஃது ஆழ்ந்த அமைதியான உறக்கத்தினால் நீக்கப் பெறுகின்றது. முதியவர்களை விடக் குழந்தைகள் ஆழ்ந்த உறக்கத்தைப் பெறுகின்றன. ஆகையால் நச்சுப் பொருள்கள், ஒருவருக்கு அகவை முதிர முதிர உறக்கத்தினால் மிகச் சிறிதளவே நீக்கப் பெறுகின்றன. ஆகவே முதுமையில் உறக்கமின்மையால் மிகையாக நச்சுப் பொருள்கள் குவிந்து போகின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

7. பிரஞ்சுக்காரர் 'பாபூன்' என்பவர், "வாழ் நாளின் அளவு, பாலூட்டிகளுக்கு(Mammals)தம் வளர்ச்சிக்கால அளவின் 5அல்லது 6 மடங்காக இருக்கின்றது" என்று கூறுகின்றார்.

	முழுவளர்ச்சி பெற	வாழ்நாள் அளவு	
நாய்	2-ஆண்டுகள்;	10-இலிருந்து	12-ஆண்டுகள்;
குதிரை	5 ,,	20 ,,	30 ,,
மாந்தன்	25 ,,	125 ,,	150 ,,

உலகின் பல்வேறு உயிரினங்களின் வாழ்நாட் பேரெல்லைகள் கீழே தரப்பெற்றுள்ளன:— (ஆண்டுகளில்)

	உயிரினம்	வாழ்நாட்-பேரெல்லை.		உயிரினம்	வாழ்நாட்-பேரெல்லை.
1)	நாய்	12	6)	கிளி	100.
2)	ஆ [பசு]	18	7)	கழுகு	120.
3)	பாம்புகள்.	30	8)	ஆமை	150-200.
4)	வாலில்லாக் குரங்கு	40	9)	முதலை	300
5)	யானை	100	10)	திமிங்கிலம்	500

'பெர்ல்' என்பவர் மாந்த இனத்தை அதன் வாழ்நாட் பேரெல்லையை யொட்டிக் கீழ்க் கண்டவாறு பிரித்துள்ளார்.

1)	குறுகிய வாழ் நாளை உடையவர்	50 ஆண்டுகள்.
2)	நடுத்தர ,, ,,	75 ,,
3)	நீண்ட ,, ,,	100 ,,
4)	தனிச்சிறப்புத் திறமுடையவர்	150 ,,

மூப்பியல் துறை வெற்றியளிக்குமாயின் "ஆல்டசு ஆக்சுலே" யினுடைய "சிறப்பு மிக்க புதிய உலகம்" என்னும் நூலில் கூறி யுள்ளது போல், மாந்தன் தன்னுடைய பழுத்த முதுமையிலும், வலிவுடனும், ஆற்றலுடனும், உணர் வார்வத்துடனும், வாழ்ந்து, இயல்பாக முதுமையுற்று, நோய்வாய்ப் பட்டுத் துன்பங்களுக்காளாகி மாண்டு போவதைப் போலல்லாது திடுமென இறந்து போவான்.

ஒருவர், மற்றொருவரைவிட விரைவில் ஏன் முதுமைக்கு ஆளாகின்றார் என்பதுதான் மூப்பியல் துறை வல்லுநர்களை வியப்புக் குள்ளாக்குகின்றது. "கொன்ராடு ஆடுநர்" என்பவர் தம் 80-ஆம் அகவையில் ஓர், உலகத் தனிப்பெருந் தலைவராக விளங்கினார். "கியூசிப்பே வெர்டி" என்பவர் தம் 70-ஆம் அகவைக்கு மேல்தான் தம்முடைய இசை நாடகங்களில் இரண்டை இயற்றினார். "வின்சுடன் சர்ச்சில்" தம் 66-ஆம் அகவையில் பிருத்தானியப் போர் முயற்சி களின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். ஆயினும், சில மாந்தர்கள் தம் 40-ஆம் அகவையிலேயே முதுமையின் பிடிப்புக்கு ஆளாகிவிடுகின்றனர்.

முதுமையடைதலானது, பிற இயல்பான நோய்களினின்றும், தனிப்பிரிவுடைய பல் கூட்டுத் திரட்டு வழி வகையினை யுடையதாக இருக்கின்றது, என்பதை மூப்பியல் நூல் வல்லுநர்கள் ஒப்புக் கொள் கின்றனர். இதனுடைய எந்த ஒரு முறைமையின் பழுதுறும்

தன்மையும் காலக்கழிவோடு சார்புடையதா யிருக்கின்றது என்றும், இது வெப்ப ஆய்வு நூலின் இரண்டாம் விதியைச் சார்ந்ததா யிருக்கின்றது என்றும் அவர்கள் எண்ணுகின்றனர். நுண்பெருக்காடியின் கீழ்க் காணப்பெறும் ஓர் உயிரணுவின் தோற்றமே இதற்குக் குறிப்பான சான்ருகும். ஓர் இளைஞனின் குறிப்பிட்ட ஒரு தசைநாரில் காணப்பெறும் உயிரணுக்கள் யாவும் ஏறத்தாழ ஒன்று போன்றே இருக்கின்றன. ஆனல் முதுமையுடையோரின் உயிரணுக்கள், இயல்பான தோற்றமளித்த போதிலும், அவை தம்முள் ஒத்தியங்கும் தன்மையுடையன வாயில. இதைப் போன்றே, ஒரு துண்டுத் தசை நாரைச் சற்றுத் தாறுமாருன இயக்கமுடையது என்று கூறலாம். இதனடிப்படையிலேயே, பெரும்பான்மையான உடலுறுப்புகளையும் முழு உடலையுமே கூறலாம். "முழு உடலையும் சார்ந்த இயக்கங்களில் ஏற்படும் இழப்பு, உறுப்புகளில் ஏற்படும் இழப்புகளைவிட மிகையானது. சிறுசிறு இழப்புகள் யாவும், ஒன்று சேர்ந்து, மிகப்பெரிய இயலாமையைத் தோற்றுவிக்கின்றன என்பதாகத் தெரிகின்றது" என்று 'நாதன் சாக்கு' கூறுகின்ருர்.

மாந்தன் தனக்கு வரும் ஏதம், நோய், கதிர்வீச்சு, உணர் வழுத்தம் இவற்றைத் தவிர்த்து வாழ்ந்தால் 125 - ஆண்டுகட்டு வாழலாம். தங்களுடைய வளர்ச்சியை நிறுத்தாத விலங்குகள் முதுமையடைவதாகக் காணப்படவில்லை. ஆமை, தான் உயிருடன் இருக்கும் காலம் வரையிலும் வளர்ந்துகொண்டே யிருக்கின்றது. ஏதாகிலும் ஒரு கொடிய நோய், அல்லது பெரிய புண் ஏற்பட்டால் மட்டும்தான் இறந்து போகின்றது. தட்டை வடிவச் சிறுமீன் வகையில் பெண் இனத்திற்கு இவ்வுண்மை வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆனல் அதனுடைய ஆண் தன்னுடைய வளர்ச்சியை நிறுத்திவிடுவதால் முதுமைக்கு ஆளாகின்றது.

இவ்வாருன தனிச்சிறப்புமிக்க இயல் நிகழ்ச்சி, பல ஆண்டுகளாக, அறிவிய லறிஞர்களை "விலங்குகள் பருவ முதிர்ச்சி அடையுங்கால் சேமிக்கப்பெற்ற, ஆற்றல் வாய்ந்த கருப் பொருள்கள் படிப்படியாகச் செலவழிந்து போவதால் அவை முதுமை எய்துகின்றன" என்று கூறும் நிலையில் வைத்துள்ளது. ஆனல், பிறர், தனிப்பட்ட ஒருவர், முடுக்கப்பெற்ற ஒரு மணிப்பொறியைப் போன்று பிறக்கும் பொழுதே குறிப்பிட்ட அளவு ஆற்றல் பொதிந்து

வைக்கப் பெற்றுள்ளார் என்று கூறுகின்றனர். ஆனால் இக் கொள்கை, இக்கால் வலிவிழந்து போயிற்று.

பெண்ணினத்தில் மட்டும் அகவை முதிர்தலைத் தள்ளிப்போட முடியும். ஆனால் ஆணினத்தில் ஒன்றும் செய்வதற்கில்லை. அகவை முதிர்தலானது உடலின் உட்சுரப்பிகளின் முறைமையில் ஒரு கடுமையான மாற்றத்தை உண்டாக்குகின்றது. பாலியல் இயக்கு நீர்ச் சுரப்பிகள் வீழ்ச்சியுறுகின்றன. பெண்களில் இதன் வீழ்ச்சி இறுதி மாதப் போக்கின் பொழுது (Menopause) தவறாமல் ஏற்படுகின்றது. ஆண்களில் இது மிக மிக மெதுவாகப் படிப் படியாக நிகழ்கின்றது. முடிவின்றித் தொடர்ந்து நிற்கின்றது.

சிட்னி நகர் கார்னல் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த "ஆசுடெல்' என்பவர் எலிகளைக் கொண்டு செய்த ஆய்வில், பெண் இயக்கு நீர்ச் சுரப்பிகள் இருபாலினர்க்கும் வாழ்நாள் நீட்டிப்பைத் தருவதையும், ஆண் சுரப்பிகள், வாழ்நாளைக் குறுக்குவதாயும் கண்டார். ஆனால் அஃது ஏன் என்பதை அவரால் அறியக் கூட வில்லை. இறுதி மாதப்போக்கில் பெண்களுக்கு ஏற்படும் உணர்வையும் உடலையும் சார்ந்த நெருக்கடிகளில் மருத்துவர்கள், பெண் இயக்கு நீரையே பரிந்துரைக்கின்றனர்.

சிக்காகோ பல்கலைக் கழகத்தின் தாய்மை மருத்துவத் துறை (Obstetrics), பெண் நோய் மருத்துவக் கலை (Gynecology) இவற்றின் தலைவர் 'எம். எட்வர்டு தேவிசு' என்பவர், இப்பண்டுவம் வாழ்நாள் முழுமையும் தொடருதல் வேண்டும் என்று நம்புகின்றார். இவ்வாறு அவர் பல ஆண்டுகள் கூர்ந்து நோக்கிய பொழுது, மிகச் சில பெண்களே, மிகக் குறைவான அளவு, நெஞ்சாங்குலை (Heart) குருதிக் குழல்கள் இவற்றைச் சார்ந்த தொல்லைகட் காட்படுகின்றனர் என்று கண்டார். இப்பொழுது அவர் கூறுவதாவது: "பெண்களில் அகவை முதிர்தலைத் தள்ளிப் போடுதல் என்பது, இப்பொழுது நம்முடைய ஆற்றலுக் குட்பட்டிருக்கின்றது. அவர்கள் நல வாழ்க்கையை மேற்கொள்ளலாம். ஆனால் ஆண்களுக்கென்று ஒன்றுமே செய்ய இயலாது" என்பதே.

நலவாழ்க்கை, வாழ்வு நீட்சி, இவற்றிற்கு இயல்புடைய மண வாழ்க்கையே ஒரு துணைக் கூறாக விளங்குகின்றது. மண வாழ்க்-

கையை மேற்கொண்டுள்ள ஒருவர்க்கு மண வாழ்க்கையை மேற்கொள்ளாது தனித்தே வாழ்கின்ற ஒருவரைக் காட்டிலும், வாழ்நாள் நீட்சியுடையதாயிருக்கின்றது. பல்லாண்டுகட்குமுன் இசுகாத்லாந்து நாட்டில் எடுக்கப்பெற்ற ஒரு புள்ளி விளக்கத் தொகுப்பினால் இவ்வுண்மையை அறியலாம்.

அகவை	இறப்பு எண்ணிக்கை	
	மண வாழ்க்கையை மேற்கொண்டவர்கள்.	தனி வாழ்க்கையை மேற்கொண்டவர்கள்.
60—65.	3385	4330.
65—70.	8055	10143.
80—85.	17400	19688.

பெர்ட்டிலன் என்பார் 'மகப்பேற்றின் ஏதத்தைப் (Risk) பெண்கள் பெற்றிருந்த போதிலும் மணவாழ்வில் ஆண்களைவிட நெடிய வாழ்நாளைப் பெறுகின்றனர்.'' என்று கூறியுள்ளார் ''மண வாழ்க்கையை மேற்கொண்டுள்ள ஆணும் பெண்ணும் ஒழுங்கான இல்வாழ்க்கையை மேற்கொள்ளுங்கால், உடல் தோற்றத்திலும் முன்னேற்றம் கொள்கின்றனர். முதுமையின் தொடக்கமும் தள்ளிப் போகின்றது'' என்று மருத்துவர் ஃகேவல் பர்க்கு (Havel Burg) என்பவர் கூறியுள்ளார். மண வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர்களின் உடல், உளநல வாழ்க்கையானது, ஐயத்திற்கிடமின்றி இயல்புடையதாகவும், ஒத்தியங்கும் தன்மையுடைய தாகவும் உள்ளது. தனி வாழ்க்கையை யுடையவர்களைக் காட்டிலும், மண வாழ்க்கையுடையவர்கள் மிகையான, நோய் எதிர்ப் பாற்றலையும், மிக்க வலி வாண்மையையும், உள்ள உறுதியையும், பெற்றிருக்கின்றனர். ''அடிக்கடி தற்கொலைக்குத் தூண்டுகின்ற, வாழ்வின் உளச் சோர்வு, எழுச்சிகுன்றிய நிலை உளச் சோர்வு நோய், வெறித்தனம் அல்லது மட்டுமீறிய ஆவல் இவை, மணமாகாதவர்களைக் காட்டிலும், மண மானவர்கட்கிடையே மிகக் குறைவாகவுள்ளது'' என்று வால்ட்டர். எம். காலிசன் என்பவர் கூறியுள்ளார்.

மண வாழ்க்கை யுடையவர்கள், தனி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர்களைக் காட்டிலும் நலவாழ்க்கையைப் பெறுகின்றனர் என்பதற்குச் சான்று தேவையில்லை. ஒரு விலங்குகூட இவ்வுலகில் இயற்கை யோடியைந்த இயல்புடைய வாழ்க்கை நிலையில், தனி

வாழ்க்கையை மேற்கொண்டிருக்கவில்லை. பண்டைக்கால மாந்தர்கள், தனி நிலை வாழ்க்கையையும் அதன் துன்ப விளைவுகளையும் பொறுத்துக் கொண்டதில்லை. நாகரிக முதிர்ச்சி பெற்றவர்கள் என்று கூறிக் கொள்ளும் இக்கால மாந்தர்தாம், இயற்கையின் முதல் நெறியாகிய "இனப்பெருக்கம்" என்னும் நெறியை எதிர்த்து வாழப் பெருமுயற்சி செய்கின்றனர்.

மாந்த வாழ்வில் மகிழ்ச்சிக்குரிய அடிப்படையான துணைக் கூறுகளாக (1) உய்வுக்குரிய வழிகள் (2) அன்புடன் கூடிய பாலியல் விழைவின் நிறைவு (3) உடல் நலம் இம்மூன்றுந்தாம் அமைந்துள்ளன. இம் மூன்றையும் தனி ஒருவருடைய, விழைவு, நுகர்ச்சித் தன்மை இவற்றினடிப் படையில் தமக் கேற்றவாறு வரிசைப் படுத்திக் கொள்கின்றனர். சிலர் செல்வம்தான் வாழ்வில் இன்றியமையாதது என்று கருதலாம். சிலர் உடல் நலந்தான் மிகவும் விரும்பப்படுவது என்று கூறலாம். ஆனால் நாகரிக வளர்ச்சியில் முன்னிலையில் உள்ள மாந்தக் கூட்டுறவின் வாழ்க்கையில் நிறைவளிக்காத பாலியல் விழைவுகளே வாழ்க்கையில் மகிழ்ச்சியின்மைக்குக் கரணியங்களாக உள்ளன.

மாந்தனுடைய மூளையின் அளவும், அதனுடைய உட்சிக்கலுந் தான், அவனைப் பாலூட்டிகளிலேயே மிக நீண்ட வாழ்நாள் உடையவனாகச் செய்கின்றன. உயர் நிலை விலங்குகளில், அவற்றின் உடல் எடைக்கும், மூளையின் எடைக்கும் உள்ள தகவீடுதான் (Ratio) அவற்றின் வாழ்நாட் காலத்தை முடிவு செய்கின்றது. கொறிவிலங்கினத்திலேயே (Rodent Family) அணில்கள் தாம் மிகப் பெரிய மூளையை உடையன. ஆகையால் அவை மிக நீண்ட காலம் வாழ்கின்றன.

மீண்டும் அமைக்கவியலாத உயிரணுக்களைப் படிப்படியாகவும், நிலையாகவும் மூளை இழந்து வந்த போதிலும், அது, தன்னகத்தே போதுமான அளவுக்குமேல் சேமிப்புப் பொருளையும், தன்னியக்கத்தை மீண்டும் சரிப்படுத்திக்கொள்ளும், குறிப்பிடத்தக்க ஆற்றலையும், பெற்றிருக்கின்றது. சிகாகோ பல்கலைக் கழகத்தின் உளநூல் வல்லுநர் (Psychologist) 'வார்டு ஆல்செடு' என்பவர் "மூளையின் பாதி வாழ்நாள் தனிப்பட்ட ஒருவரின் முழு வாழ்நாளைவிட

மிகையாகவே இருக்கின்றது. நாம அதற்கு உயிர்வளியையும், ஊட்டத்தையும் (குருதி) ஒழுங்காக அளித்துவந்தோமானால் அது நூறு ஆண்டுகட்கு நன்னிலையில் இருக்கும்'' என்று கூறுகின்றார்.

உடலின் ஒரு சில உறுப்புகள் மட்டும்தாம் மற்றவற்றை விட முதுமைக்கு ஆட்படுகின்றன என்பது, மூப்பியல் துறையின் ஒரு சிறப்பான கண்டுபிடிப்பாகும். மூளையும், "எண்டாக்கிறின்" என்னும் உட்சுரப்பிகளின் ஒழுங்கியல்புகளும் வியக்கத்தக்க வகையில் முதுமையை எதிர்த்துச் செயற்படுகின்றன. மூளைக்கு அடிப்பகுதியில் அமைந்துள்ள "பிட்டுருட்டி" என்னும் குரு கழலைச் சுரப்பியானது, பிற சுரப்பிகளான, கேடயச்சுரப்பி (Thyroid) குண்டிக் காய்ச் சுரப்பி (Adrenals) இவற்றின் இயக்கக் குறைவைப் பொதுவாக இழப்பீடு செய்து விடுகின்றது. மற்றும் அவற்றிற்கு ஆணையிட்டு, அதன்வழி அவை, தங்கள் சுரப்பளவுகளைச் சரியாக வைத்துக் கொள்ளுமாறும் கண்காணிக்கின்றது.

ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான தனிப்பட்ட உயிரணுக்களில் சில பழுதுறுவதினாலும், சில முதுமை யுறுவதினாலும், மீண்டும் புதுப்பிக்க வியலாதவாறு இறந் தொழிகின்றன. தோல் ஈரற்குலை, போன்ற உறுப்புகளில் மடிந்துபோன உயிரணுக்களுக்குப் பகரமாகப் புதிய உயிரணுக்கள் விரைவிலேயே அமைக்கப் பெறுகின்றன. ஆனால் உயிரணுக்களின் பிரிவுறும் தன்மை அருகியுள்ள அல்லது அற்ற உறுப்புகளில் இந்த உயிரணுக்களின் இழப்புத் தொகை வாழ்நாள் முழுமையிலும் மிகப் பெரிய எண்ணிக்கையாக உள்ளது.

முதுமை அகவையில் மாந்தன் தன்னுடைய தசை நார்ப் பொருண்மையில் 35 விழுக்காட்டினை இழந்து விடுகின்றான். மூளை தன்னுடைய அளவில் 10 விழுக்காடு குறைவுறுகின்றது. இதன் காரணியமாக 'நாதன் சாக்கு' என்பவர் "உடல் ஒவ்வொரு நாளும் மிகச் சிறதளவினதாக இறந்து கொண்டே வருகின்றது'' என்று கூறுகின்றார்.

மூப்பியல் துறை மருத்துவத் துறையைப் போன்றதன்று; அதற்கு எதிர்மாறானது. ஒரு மருத்துவர் இயல்பிழந்த நிலையில் உள்ள ஒரு பிணியாளியை இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதற்காக மருத்துவம் செய்கின்றார். ஆனால் ஒரு மூப்பியல் துறை வல்லுநர்

முதுமை எய்துகின்ற ஒருவரை எவ்வாறு இயல்பற்ற நிலைக்குக் (முதுமையைத் தவிர்த்த நிலைக்குக்) கொண்டு வரலாம் என்பதை ஆராய்கின்றார்.

மாந்தரின் முதுமையுறும் தன்மையை ஆய்வது பெருந்தொல்லை வாய்ந்த தொன்றாகும். மாந்தன் ஆராயப்படுவதற்குரிய வாகான ஓர் ஆய்வுப் பொருளில்லை. எலிகளைப்போல் கட்டுப் படுத்தப் பெற்ற நிலைகளில், கூடுகளில் அல்லது ஆய்வு அறைகளில் அவனை அடைத்து வைத்தல் இயலாது. மேலும் நூற்றாண்டுக்காலம் வாழக் கூடியவன். இக்காரணியம் பற்றியே மூப்பியல் நூல் வல்லுநர் ஒருவர், "இத்துறையின் ஆய்வு பற்றிய முடிவை நம்முடைய பேரப் பிள்ளைகள் தாம் முடிவாக அறிவிக்கக் கூடிய தன்மையில் உள்ளதால் இவ்வகையில் ஆய்வு செய்யப் புகுவது, ஊக்க மளிப்பதாக இல்லை" என்று கூறுகின்றார்.

கி. பி. 2000 ஆண்டு வாக்கில் தனிப்பட்ட ஒருவருடைய அகவைக்கால அளவோடு 20 முதல் 40 வரை பயனுள்ள ஆண்டுகளைக் கூட்ட முடியும் என்று மருத்துவர் இலியன் காசு (Dr. Leon Kass) என்னும் அமெரிக்க அறிவியலறிஞர் அண்மையில் அறிவித்துள்ளார். பண்டைய மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பெற்ற அண்மைய ஆய்வுகள், அகவை முதிர்தலானது தனிச் சிறப்புடைய மருந்துகளாலும், உணவுகளாலும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு இயல் நிகழ்ச்சியாகஇருக்கின்றதைக் குறிப்பிடுகின்றது என்றுகூறுகின்றார்.

விலங்குகள் மீது நிகழ்த்தப் பெற்ற ஆய்வுகளிலிருந்து, மாந்த உடலின் வெப்ப அளவை மிகச் சிறிதளவு குறைப்பதன்வழி, அகவை முதிர்தலின் விரைவைக் குறைக்க முடியுமென்று அறிவியலறிஞர்கள் நம்புகின்றார்கள் என்று கூறுகின்றார். உடலின் இயக்க முறைமைகள் குறைந்த வெப்ப நிலையில் மெதுவாகவே செயற் படுகின்றனவாம்.

"தனிப்பட்ட ஒருவர் தமக்கு வாழ்நாள் நீட்டிப்பைப் பெறுவதற்கு மிகப் பெரிய தொகையினைச் செலவிடுதல் வேண்டும். நாம் இப்பொழுது ஒருவர்க்கு வாழ்நாளை எப்படி நீட்டிப்பது என்பதை மட்டும்தான் அறிந்துள்ளோம். ஆனால், அவர் அந்நாட்களை எவ்வாறு பயனுடையனவாகத் துய்க்கும்படிச் செய்வது என்பதை அறியக்கூட வில்லை" என்று கூறுகின்றார்.

தன்னடக்கத்தோடு கூடிய மிதவாழ்க்கை நீண்ட வாழ்நாளுக்குத் துணை செய்கின்றது. நூருண்டுக் காலம் வாழ்ந்தவர்கள், தம் வாழ்நாளில் எந்நிலையிலேனும், எச் செய்கையிலேனும், அளவுக்கு மீறிச் சென்றிலர். அவர்கள் உணவு உண்பதிலும், குடி வகைகளை அருந்துவதிலும், எப்போதும் அளவோடுதான் இருந்து வந்துள்ளனர். தன்னடக்கம் பசி உணர்வைக் கட்டுப் படுத்துவதோடல்லாமல், மட்டு மீறுகின்ற, பிற, பல்வேறு உணர்ச்சிகளையும் கட்டுப் படுத்த வல்லது. சினம், அழுக்காறு, தீய உணர்வுகள், இவை யாவும் மாந்த உடலில் கேடு பயக்கும் விளைவுகளைத் தோற்றுவிக்கும் அடிப்படைக் கரணியங்களாக உள்ளன. இவையே வாழ்நாள் குறுகுதலுக்கும் வழி வகுக்கின்றன. அன்பு இழையோடுகின்ற நல்ல எண்ணங்களும், நிறைவுணர்வுள்ள தூய்மையான உள்ளமும் ஒருவர்க்கு வாழ்நாள் நீட்டிப்பைத் தருகின்றன.

உலகில் பல்வேறு காலங்களிலும், பல்வேறு நாடுகளிலும், மித வாழ்க்கையை மேற்கொண்டு நூருண்டுகட்டு மேல் வாழ்ந்தவர்களுடைய எண்ணிக்கை மிகப் பல. சிலருடைய பெயர் எடுத்துக் காட்டாகக் கீழே தரப் பெற்றுள்ளன.

1) சாரோ ஆகா (Zaro Agha) அகவை 156. மகமதியர் மரக்கறி உணவினர். அமெரிக்காவில் ஒரு நேர்ச்சியில் இறந்து போனுர்.

2) வில்லியம் வாக்கர் (William Walker) நாட்டிங்காம் சயர் மாநிலத்தைச் சேர்ந்தவர் 106 அகவை வாழ்ந்தார்.

3) சார்லசு மக்குக்கின் (Charles Macguekin) ஆங்கிலேயர் 108 அகவையுடையவர். பெங்களூருக்கருகில் ஒயிட் பீல்டு என்னுமிடத்தில் வாழ்கின்ருர்.

4) மூசுமா பீபி என்னும் மகமதியப் பெண்மணி. அலகாபாத்துக் கருகிலுள்ள, கௌரிகார் என்னும் சிற்றூரினள். இவ்விடைத் தேர்தலில் பூல்பூர் மக்களவைத் தொகுதிக்கு வாக்களித்தவர். அகவை 127.

5) சீமாட்டி எக்லெசுடன்	- 143	இவர்கள் இசுகாத்லாந்து நாட்டில் வாழ்ந்தவர்கள்.
6) கோல்லியர்	- 137	
7) கோலோனல்	- 146	

இந்திய நாட்டில், பல சமயக் குரவர்களும், சமயத் துறவியர்களும் பன்னூறு ஆண்டுகள் வாழ்ந்தமைக்குக் குறிப்புகள் உள.

நீண்ட வாழ்விற்கு ஒரு வழியில் மாந்தர் பேசுகின்ற மொழியும் தொடர்புடையதாக விருக்கின்றது. மாந்தர் தம் கருத்தை வெளியிடும் பொழுது ஒலி வடிவத்தில் உருவாகின்ற சொற்களைப் பயன்படுத்துகின்றனர். அவ்வொலி இயல்பாக எவ்வகை மிகை முயற்சியும் இன்றி வெளிப்படுதல் வேண்டும். சில மொழிகளில் ஒலி வடிவங்கள் மிக்க முயற்சியுடனேயே வெளிப்படுத்தும் அளவுக்கு அமைந்து கிடக்கின்றன. இத்தகைய மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் காட்டிலும்,இயல்பான ஒலியொழுங்குடன் அமைந்துள்ள மொழியைப் பேசுகின்ற மக்களுடைய வாழ்நாள் நீட்டிப்பை உடையதாக இருக்கின்றது.

தமிழ்மொழி இனிமை சான்றதாய், எளிமையுடன் எவ்வகை மிகை முயற்சியுமின்றி வெளிப்படுத்தக் கூடிய ஒலி வடிவங்கள் அமைந்து கிடக்கின்றதை மேனாட்டினரும் வியந்து போற்றியுள்ளனர். தமிழ்க்கடல் தவத்திரு. மறைமலை யடிகளாரும் "தாய்ப்பால் நிரம்ப உண்டு வளர்ந்த பிள்ளை, ஆண்டு முதிர முதிர அரிய பெரிய முயற்சிகளையெல்லாம் எளிதிற் செய்து நீண்டநாள் உயிர்வாழ்தல் போல, தமிழ்ப்பால் உண்டு வளர்ந்தவர், எத்தகைய மொழிகளையும், வருத்தமின்றிக் கற்று, நெடுநாள் உயிர் வாழ்ந்திருப்பர்" என்று கூறியுள்ளார்.

பண்டைக் காலத்தே அறிஞர் ஒருவர் "மாந்தன் இறப்பதில்லை; அவன் தன்னைத்தானே கொன்று கொள்கின்றான்" என்று கூறியுள்ளார். இது பெரும்பான்மை மக்களிடையே உண்மையாயிருக்கின்றது. சில காலத்திற்குப் பின் ஒவ்வொருவரும் இறந்து போகின்றமை உண்மையே யாயினும், மிகச் சிலரே இயல்பான வாழ்நாட் பேரெல்லையை அடைகின்றனர்.

உடலுக்கு உரிய உணவும், குடிப்பும், போதுமான கதிரொளியும், தூய்மையான காற்றும், தகுந்த உடற் பயிற்சியும், போதிய அளவு ஓய்வும் தேவைப்படுகின்றன. உடலின் கழிவுப் பொருள்கள் அவ்வப் பொழுது அகற்றப்பெறுதலும், நச்சுக் கலப்புள்ள பொருள்கள் உண்ணுதலையும், நோய் உருவாக்க நுண்மங்கள் உடலிற் புகுதலைத் தவிர்த்தலும் வேண்டும். உணர்வழுத்தங்கட்கு ஆட்படாத, அமைதியுடன் கூடிய உளநிறைவும் வேண்டும். இவையே வாழ்நாள் நீட்டிப்பிற்குரிய சிறந்த வழிகளாகும்.

"வாழ்நாளின் இனிய பருவம் இளமை. இதை நாம் முதுமையில் தான் உணர்கின்றோம்" என்ற கிளேடரின் கூற்றையும் உணர்ந்து கொண்டு உரியவாறு ஒழுகுதலே உணர்ந்தோரின் கடமையாகும். 0

அயல் நாட்டில் வாழ்கின்ற தமிழர்க்கு ....!

— பெருஞ்சித்திரன்.

(சிங்கப்பூர்த் தமிழர் இயக்கத்தின் உரிமை ஏடாகிய "கொள்கை முழக்கம்" என்னும் தனித்தமிழ் இதழ்க்கென எழுதியது.)

1. தமிழினத்தீர் ! உலகெங்கும் சிதர்ந்தோடி னுலும்
தம்நிலத்தை, தம் இனத்தை மறவாமல் என்றும்
அமிழாது வாழ்கின்ற தாய்க்குலத்தீர் ! நீங்கள்
அயல் நாட்டில்– அயலினத்தில்– அயல்மொழிகட் கிடையில்
சிமிழாது நிலைநின்று, தமிழ் மொழியைப் பேணிச்
சிறப்புறவே காத்துவரும் பெருமையினை நோக்கின்
கமழாத உளத்திலெல்லாம் கற்பூரம் நாறும் !
களிப்பில்லா நெஞ்சிலெல்லாம் மயிலாடிக் கொஞ்சும் !

2. கடலோடி னுலுமன்னைத் தமிழ் ஓடா நெஞ்சும்,
காசுபணம் சேர்த்தாலும் பழிசேர்க்கா வாழ்வும்,
உடலாடிச் சாய்ந்தாலும் சாயாநற் பண்பும்,
உயிராடிக் குலைந்தாலும் நிலைகுலையா உரனும்,
குடலோடும் நீருக்கும் சோற்றுக்கும் என்றே
குரலோட்டம் மாருத மாண்பும் உடை யீர் ! – என்
மடலோடும் உணர்வோடும் பாட்டோடும் உங்கள்
மனத்தோடும் உள்ளுணர்வில் குளித்தாடு கின்றேன் !

3. அயல்நாட்டில் வாழ்கின்ற தமிழினத்தீர் ! உங்கள்
அடிபணிந்து வேண்டுகின்றேன்: என்றும், எக் காலும்
கயல் நாட்டை – பாண்டியனின் கன்னித்தமிழ் நாட்டை,
கழனிமிகும் சோழனது புலியுலவும் நாட்டை,
புயல் நாட்டை – கருமுகில்கள் மலைசூழ்ந்து நிற்கப்
புனக்குறவன் வில்லெடுக்கும் சேரனது நாட்டை,
வயல் நாட்டை – தமிழ்நிலத்தை மறவாதீர் ! நாமும்
வாழ்ந்துகெட்ட வரலாற்றை நொடியும்மற வாதீர் !

4. செந்தமிழை மறவாதீர்! மறவாதீர்!! உள்ளம்
சிலிர்த்தாடும் தமிழினத்தை மறவாதீர் என்றும்!
நொந்தவுளத் தோடுங்கட் குரைக்கின்றேன் இதனை!
நொடிந்தவினம் தமிழினம்போல் விரியுலகில் இல்லை.
சொந்த மொழி, சொந்த இனம் தமைப்பார்த்துத் தமிழன்
சொத்தை மொழி – செத்த வினம் எனப்பேசு கின்ருன்!
வந்த மொழி, வந்தயினம் தமக்கடிமை செய்வான்;
வாழையடி வாழையென அடிமைநலங் கண்டான்!

5. தன்னுணர்வைக் கட்டவிழ்த்தான்! தன்மானம் விட்டான்!
தாழ்ச்சியிலாப் பெருமொழியை வீழ்ச்சியுற வைத்தான்;
முன்னுணர்வைத் தானிழந்தான்; மொய்ம்புகழைக் கொன்ருன்;
முக்கழகச் சீர் மறந்தான்; பேர்மறந்தான்; இக்கால்
தின்னுமொரு கைச்சோற்றைப் பெரிதென்றே எண்ணித்
தீய்க்கின்ருன் தமிழ்நலத்தை; சாய்க்கின்ருன் குடியை!
இன்னுமெவ்வா றெடுத்துரைப்பேன்? அம்மாவோ! அடடா!
எடுத்தெறியும் எச்சிலைக்கே இனங்காட்டித் தந்தான்!

6. இப்படியாய்க் கீழ்ப்படியில் இருந்தபடி வாழும்
இந்நாட்டுத் தமிழினத்தை விட்டயல்நா டேகி
அப்படியே பழந்தமிழ்வாழ் தமிழர்களாய் வாழ்வீர்!
அடிவயிறுங் குளிர்ந்ததுகாண் உமையெண்ண எண்ண!
முப்படியாய் உயர்ந்து விட்டீர் உடன்பிறப்பீர்! நாங்கள்
முதுகாட்டின் பழம்பிணமாய் அழுகுகின்ற போழ்தில்
கொப்படியில் முளைவிட்டுத் துளிர்க்கின்ற செடிபோல்
கொழுந்துவிட்டே இலைவிட்டுப் பூவிட்டுப் காய்த்தீர்!

7. காய்த்தகுலை கிளைகனக்கக் கனிந்துவர லானீர்;
கண்குளிரக் காண்கின்றேன்; உம் வளர்ச்சி கோடி!
சாய்த்ததலை நிமிரவில்லை தமிழ்நாட்டில் தமிழன்.
சாகடித்தே இழுத்தெறியக் குறிபார்ப்பார் பகைவர்;
ஏய்த்தநிலை மாறி,அவர்க் கேறுநிலை இன்றே!
எந்தமிழர் தம்கணக்கோ என்னவென்று பார்த்தால்,
வாய்த்தகுலை கோடி; அதில் அழுகல்அரைக் கோடி!
வாகாகப் பழுப்பதெல்லாம் பத்திலக்கத் தொன்றே!

8. தமிழ்நாட்டைத் தமிழமைச்சன் தான் ஆளு கின்றான்;
தமிழமைச்சர் தாம்,அரசை வழிநடத்திப் போவார் !
தமிழ் நாட்டின் பெயர் மாற்றம் செய்ததுதான் மிச்சம் !
தமிழ் மொழியின் வளர்ச்சியிலோ அப்படியப் படியே !
தமிழ் நாட்டுத் தாளிகைகள் தமிழ் மொழியைக் கொல்லும் !
தமிழ் எழுத்தில் அச்சுவரும்; நரகல் நடைப் பேச்சு !
தமிழ் நாட்டில் தமிழரில்லை; இருந்(து)அவர்வாய் திறந்தால்
தமிழ்மணப்ப தில்லை; ஐயோ ! பிறமொழித்தீ நாற்றம் !

9. ஊர்களெல்லாம் 'ஸ்ரீரங்கம்' 'விருத்தாஜலம்' தான் !
உடைகளெல்லாம் 'மினிஸ்கர்ட்டும்', 'கவுனும்', 'டைட்'
'பேண்ட்'டும் !
பேர்களெல்லாம் 'நடராஜு' 'ஜெயலலிதா' 'ஸ்வாகத்' !
பெயர்ப்பலகை 'அமெரிக்கா' 'இலண்டனை'ப்போல்மின்னும்!
சீர்திருத்தப் பேச்செல்லாம் 'வெங்காய' மணந்தான் !
சிண்டர்களின் வளர்ச்சி – 'ஸுப்ர பாதம்' 'ஸத் சங்கம்' !
தேர் திருவி ழாக்களிலோ நின்றவெலாம் ஓடும் !
தெருச்சுவரில் 'தமில் வால்க!' 'எம். ஜீ. யார் வால்க!'

10. உண்ணுகின்ற விடுதிகளின் பலகாரம், சுவையில் –
உருவத்தில் பழையவைதாம்; பெயர்ப் புதுமை அடடா !
வெண்ணெயில்லை;'பட்டர்' உண்டு!பொட்டொட்டோ பொரியல்!
வெங்காயத் தோசையில்லை 'ஆனியன்'தோ சைதான் !
உண்ணுதற்குச் சோறில்லை; 'ராரைசு' 'கீ' தான் !
'பப்பட்'; 'ஆ னியன் புளவர்' கூட்டாம் ! 'லெம் பிக்கிள்' !
தண்ணீர்இல் லை; 'வாட்டர்'! டொமொட்டோ சூப்'; 'கர்டு'!
தாழ்ந்துவிட்ட தமிழ் மொழியின் வீழ்ந்தநிலை காணீர் !

11. வானொலியில் 'அம்மாமி' 'அத்திம்பேர்' கொட்டம் !
வாழ்க்கையிலே பாதியினை விழுங்கிவரு கின்ற
பா நெளியும் திரைப்படத்தில் 'பம்மலக்கிடி கும்மா' !
படுக்கையறை, குளியலறை, நீச்சலுடைக் காட்சி !
தேனொலிபோல் பாவேந்தர் பாட்டெங்கோ வந்தால்
திரும்புகின்ற பலமுகங்கள்; கசமுசப்புப் பேச்சு !
கூனலுடல் ஆனாலும் 'கவர்ச்சி'க்கில்லை கேடு !
–குலைந்துவருந் தமிழகத்தின் கொடுமைநிலை காணீர் !

12. *கல்விநலந் தேடுகின்ற மாணவர்கள் தம்மைக்*
கவலையொடு நினைக்கின்றேன்! என்னநிலை ஆமோ?
செல்வ நலம் மிக்கவர்கள் மேன்மேலும் வாழ்வார்;
செத்தழியும் வெறும் வயிறார் தொகைபெருகிப் போனார்!
வெல்வதினி எக்காலம், எந்தமிழர் நாட்டை?
விளைந்துவரும் கொடுமைகளை ஒழிப்பதினி எந்நாள்?
சொல்வதிலே பொய்யில்லை; அயல்நாடு சென்றீர்!
சொந்தநிலந் திரும்பாமல் நினைந்துமகிழ் வீரே!

திருத்தம்

முன் இதழ்களில் வெளிவந்த "மடக்கை"க் கட்டுரையில் முகாமைத் திருத்தங்கள்.

சுவடி: 8. ஓலை: 10. பக். 39. மடக்கை இலக்கணத்தின் இறுதி அடியை "இயல்பொது என அதன் உள்ளிரு பிரிவே" எனப் படிக்க.

சுவடி: 8. ஓலை: 11-12. ப. 49 முதல் நான்கு வரிகள்,

$$\approx \tfrac{1}{2} \times \bar{3}\cdot 2141$$

$$= \tfrac{1}{2} \times \left(\bar{4} + 1\cdot 2141 \right)$$

$$= \bar{2}\cdot 60705 \text{ அல்லது } \bar{2}.\,6071$$

எனவே ஆரம் = எதிர்மகை $\bar{2}\cdot 6071 = 0\cdot 04047$ செ. மீ.

நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு.

பூஞ்சோலை

ஆசிரியர்: காரை-இறையடியான், காரை. அழகன்.

ஆண்டுக் கட்டணம் 3 உருபா.
தனி இதழ் விலை 25 காசு.

இன்றே உறுப்பினராகுங்கள்.

பூஞ்சோலை காரைக்கால்-1.

பாவாணருக்கு வாழ்த்துப்பா.

(தி. பி. 2002 ஆடவை "உகூ" (10—7—71) அன்று நடந்த காரைக்கால் மாவட்ட உலகத் தமிழ்க் கழகத் தொடக்க விழாவில் உறுப்பினர் சார்பில் வரவேற்றுப் பாடியது.)

மொழியுலக மூட்ட முகிற்குழா மோட்டிச்
செழிப்பருட் செந்தமிழ்ச் செஞ்ஞாயி றாகிக்
கயமைக் கலப்படக் காரிருள் தாக்கும்
நயமை நடுமை நவையில் பெரும்புலமை
உண்மை உரிமை உயர்மை விழுமை
வளமை வழிமை வனப்பார் முழுமை
செறிந்த செழிப்பாய்ச் செயலுருக் கொண்ட
நெறித்தமிழே அண்ணலே நீள்சுவைக் கன்னலே!
தேவருள் நற்கொடையே தேவநேயப் பாவாணக்
காவலே கல்விக் கடலே வணக்கம்!
தமிழில் தவத்தில் தலைக்கற்புத் தன்னில்
அமைபுகழ் ஆள்காரை அம்மையார் அன்றே
வழித்தூய்மை செய்து வளக்கோவில் கண்ட
செழிப்பிட மன்றில் சிறப்புடன் நின்று
மொழித்தூய்மை செய்துவந்த மூப்பே வருக!
பழிப்பொழி பைந்தமிழ்ப் பண்பே வருக!
உலகத் தமிழ்க்கழக ஒண்மைத் தலைவ,
புலமைத் தனித்தமிழ்ப் பொற்பே வருக!
பிழைக்கத் தமிழ்கற்ற பேதையர் நாண
உழைப்பால் தமிழுயர்த்தும் ஓர்வே வருகவே!
செந்தமிழ்ச் சொற்பிறப்பைச் செய்து முடித்தபின்
முந்தைப் புலவர்க்கும் பிந்தைப் புலவர்க்கும்
எந்தாய் தலைவன் நீ எட்டுணையும் ஐயமில்லை.
பைந்தமிழ் வாழ்வோங்கப் பல்லாண்டு நீ வாழ்க!
நெஞ்ச வரவேற்பு நீர்மைப்பா ஏற்க்வா
துஞ்சாதுன் தொண்டுத் தொடர்.

அன்பு,

காரை மாவட்ட உ. த. க. உறுப்பினர்கள்.

பெருஞ்சித்திரனாருக்கு வாழ்த்துப்பா.

(தி: பி 2002 ஆடவை "உசு" (10—7—71) அன்று நடந்த காரைக்கால் மாவட்ட உலகத் தமிழ்க் கழகத் தொடக்க விழாவில் உறுப்பினர் சார்பில் வரவேற்றுப் பாடியது)

தென்மொழித் தாளிகையால் தேற்றத் தனித்தமிழை
நன்முறையில் நாடறிய நற்றிறங் காட்டிவரும்
செந்தமிழ் வீறே! செயன்மைத் தமிழ்ப்பேறே!
பைந்தமிழ்ப் பாட்டுலகில் பாவல ரேறே !
பெருஞ்சித்தி ரக்கோவே பெற்றிமணப் பூவே
இருந்தமிழ் ஈர்ப்பின் இசையே வணக்கம்!
அருந்திட்ட ஆக்கம் அளித்துப் "பா வாணர்"
பெரும்பணியைப் பேணவந்த பீடே வருகவே!
அம்மைப் புகழரங்கில் செம்மை நடுவராய்
வெம்மை களையவந்த வெற்றியே நீவருக!
"பாவியப் பூங்கொத்தே" பண்பொளி "ஐயை"யால்
தாவிய நற்புகழே தண்டமிழே நீ வருக!
"எண்சுவை எண்பதாம்" பண்சுவை தேன்கூட்டை
மண்சுவைக்கத் தந்த "மதிப்பொளியே" நீ வருக!
அந்தமிழ்ப் பூஞ்சோலை யாங்கே "அறுபருவச்"
செந்தமிழ்க் கூத்திடும் செம்மையே நீ வருக!
"கற்பனை ஊற்றாய்" உட் காசொழிக்கும் காவலே!
பற்பல ஆக்கம் "படைக்கின்ற பாக்கோவே!
போலிப் பொறுமையர் போக்கைப் பொருட்படுத்தா
வேலி வியன்றமிழின் வெற்றியே நீ வருக!
"கொய்யாக் கனி"யெனுங் கொங்குத் தமிழீந்த
அய்யாவே, அன்பறிவின் ஆழமே, நீ வருக!
பள்ளிச் சிறுவர்க்குப் பைந்"தமிழ்"ச் சிட்டாகி
உள்ளந் திருத்திவரும் ஓங்குழைப்பே நீ வருக!
மூட மடமொழித்து முத்தமிழைக் காப்பதற்குப்
பாடம் வழங்கிநின்று பல்லாண்டு நீ வாழ்க!
எம்மன வாழ்த்தினை ஏந்தலே வந்தேற்க;
செம்மைக்கும் உன்னால் சிறப்பு.

அன்பு,
காரை மாவட்ட உ. த. க. உறுப்பினர்கள்.

0: 251: சுவடி – அ – கன்னி இதழ் நனியும் சிறந்திருந்து. ஆசிரியவுரை தமிழ் இனப் பகைவர்களைக் கடுமையாகச் சாடுகிறது. மூன்று அறிவியல் கட்டுரைகளும் தூய் தமிழால் மொழியாக்கம் செய்யஇயலாது என்பவர்களுக்கு ஓர் அறைகூவலாகும். "தனிமப் பட்டியலைக்" கண்ணுற எம் கல்லூரி அறிவியல் பேராசிரியர்கள் (பார்ப்பனர்கள்) வியந்தனர். எம்மிடத்திலிருந்து 'தென்மொழி' வாங்கிச் சென்று பயிலுகின்றனர். தூய்தமிழால் முடியாது என்று கூறிய எம் கல்லூரி மாணவர்களே 'தனிமப் பட்டியலைக்' கண்ணுற்ற பின் எமக்கு விடையிறுக்க முடியாமல் திண்டாடுகின்றனர். 800 மாணவர்கள் தங்கியுள்ள 'விடுதிப் படிப்பகத்தில்' தென்மொழி போடப்படுகிறது. கோ. திருநாவுக்கரசு, காரைக்குடி.

0: 252: தென்மொழி யன்பன் என்ற முறையிலும் உ. த. க. தொண்டன் என்ற முறையிலும் தங்களின் அடியான் என்ற முறையிலும் நான் தனித்தமிழ்த் தாளிகைகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளேன். தங்கள் அரிமா நோக்கு அயராப் பணிதொடர, என்னாலியின்றதை,நான் தங்கட்குச் செய்வதன்மூலம்,தமிழ்-தமிழின-தமிழக மேம்பாட்டுக்கு அல்லும் பகலும் பணியாற்றும் தங்கள் பணியில்– தங்கள் வழியில் செயல்பட முனைந்துள்ளேன். உ. த. க. வின் பிறப்பிடமே தென்மொழிதான் என்பதை எல்லோரும் அறிவார்கள். அவ்வகையில் தங்களது கொள்கைகளைப் பரப்பிட – உ. த. க. வின் கொள்கைகள் சிறக்கும். இப்பெரு நோக்கின் அடிப்படையிலேயே நான் தங்கள் இதழின் முகவராக என்னை ஈடு படுத்திக்கொள்கிறேன்.

– அரங்க-திருமாறன், உரத்தநாடு.

0: 253: தென்மொழி வளர்ச்சி கண்டு யான் கழிபேருவகை அடைகின்றேன். 'தமிழ் எனது உயிர்' என்று சாற்றிக் கொண்டிருந்த தாளிகைகள் ஏராளம். ஆனால் அவற்றிலே பல இன்று உரிய கொள்கைப் பிடிப்பின்மை காரணமாகச் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளமையோ இரங்கத்தக்கது! தாளிகை விற்பனைப் பெருக்கிலேயே கவனம் கொண்டு உயிர்வாழும் அவை எப்படித் தம் மூலக் கொள்கையைக் கடைப்பிடித்தொழுகும்? எனவே அவற்றின் நிலை. சாய்க்கடையிலே செல்லுகின்ற கழிவுப் பொருள்களுக்கு ஒப்பாகி விட்டது. தங்கள் தாளிகையோ, 'கெஞ்சுவதில்லை பிறர் பால், அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை. மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை' என்ற உயரிய கொள்கையை உயிர் மூச்சாக்கிக் கொண்டு உண்மைத் தமிழர் உள்ளங்களிலே உலா வருகின்றது என்றால் அது மிகையன்று.

அடிமையுற்றுக் கிடக்கும் தமிழ் இனத்திற்கு இன்று எழுச்சி தேவை. எழுச்சி மிக்க தலைவன் தேவை. அத்தகைய எழுச்சியை எட்டுத் திக்கும் அதிரச் செய்திடும் சொல்லாற்றல் தங்கட்குத் தான் உண்டு என்று கூறின் அஃது என் ஒருவன் குரலாக மட்டும் இருக்காது. இத்தமிழர் குமுகாயம் முழுமைக்குமான ஒரு மொத்தக் குரலின் ஒரு சிறு அசைவே அதுவாம். தங்களின் தலைமையிலே இந்நாட்டிலே தோன்றிட வேண்டும் ஒரு தமிழர் இனப் புரட்சி. தலைவன் தோள்களுக்குத் தோள் தாங்கித் தூக்கிச் செல்லுவதற்குக்

(அடுத்த பக்கம் பார்க்க)

காத்திருக்கிறது, இளைய தமிழினப் படை. தமிழ் காக்கும் தலைவா! தங்கள் அழைப்பொலி கேட்கக் காத்திருக்கிறது தமிழர் படை! கட்டளையிடுக! செய்து முடிப்போம்! முழங்கட்டும், தமிழர் உரிமை ஒலி! விலகட்டும் தமிழனைச் சூழ்ந்த இருள்!

— இளந்தமிழன், (சி. வே. வே. ரமணன்) தேவம்பாளையம்.

0: 254: தென்மொழியின் நூருசிரியம் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டது. நல்ல தரமுள்ள நூருசிரியம் இடம் பெறத் தமிழன்னை பேருதவி புரிவாளாக. தென்மொழியில் புரட்சிகரமான கருத்துகளை அடிக்கடி வெளியிடுங்கள். ஏதேனும் சீர்திருத்த நாடகம் ஒன்று தென்மொழியில் வெளியிட்டால் அழகுக் கழகு செய்வதுபோல் தென்மொழி இளமை குன்ருது ஏறு நடையிடும்.

— கம்பைக் கிழான், சிறுகம்பையூர்.

0: 255: தங்கள் ஆசிரியவுரையில் காணப்பெறும் உணர்வுப் பெருக்கு ஒவ்வொரு தமிழ் மறவனின் குருதியையும் துடிக்கச் செய்கின்றது. ஆனுல், தங்கள் துடிப்பைச் செயலாக மாற்றி, வீறு கொண்டு போரிட்டு வெற்றிபெற வழிதெரியாது கிடக்கின்ருேம். பார்ப்பனரும், அன்னுரைச் சார்ந்தொழுகும் வீடணத் தமிழர்களும் அதிகாரப் பீடத்தில் அமர்ந்து, ஆற்றல் மிக்க ஏனழகர் பலரைச் சுரண்டுவதை விட, இந்நாட்டுப் பெருநிலக்கிழார்கள் ஏழை உழவர்களைச் சுரண்டுதல் எவ்வாற்ருனும் குறைந்த கொடுமை உடையதன்று. இந்த அரசியல் கட்டுப்பாட்டிற்குள், மக்களிடை மலிந்திருக்கும் மூடப் பழக்கங்களும், நம்பிக்கைகளும் ஒழியச் செயல்படுவதெனின், அது முழுமைபெற இயலுமா? இயலாது என்பதே எனது விடை. இந்நாட்டுக் கோயில்களும், பிறவும் உழைப்பார் உழைப்பைச் சுரண்டுவார் தமது நிலையைக் காப்பாற்றிக் கொள்ள, துன்பத்துள் உழல்வோன் அது தனது 'தலையெழுத்தே' என நம்பி வாழ்வை நொந்து கொண்டு வாளாவிருக்க, என்றும் உண்மைநிலை உணர்ந்து ஏழை மக்கள் எழுச்சி பெறுதிருத்தற்காகக் கட்டிக் காக்கப் பட்டவையே என்பதை உணர்தல் வேண்டும். இவ்விடத்தில், தங்கள் கருத்தொன்றினைப் பற்றிக் குறிப்பிட விழைகிறேன். "எல்லாம் வல்ல இறைப் பேராற்றல் ஒன்றுண்டு என்ற தூய அறிவியல் உண்மை"யாகத் தாங்கள் குறிப்பிட்டது அரைகுறை அறிவியலார் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இருக்கலாம். ஆனுல், உண்மையான பொருள்முதல் நெறிநின்று உலகை ஆய்வோர் என்றும் அம்முடிவுக்கு வாரார். உயிர்கள் என்றும் யாராலும் தோற்றுவிக்கப் படவில்லையென்பதும், இயற்கையில் இருப்பனவற்றின் தொடர்நிலை வளர்ச்சியாலேயே (evolutionary changes) பல்வேறு உயிரினங்களும் தோன்றியுள்ளன என்பதும் டார்வின் முதலான அறிவியல் அறிஞர்களால் பெரிதும் நிலைநாட்டப் பெற்றுவிட்டன. இந்நிலையில், 'இறைப் பேராற்றல்' என்ற பெயரில் "படைத்தவனை"ப் பற்றிக் கற்பனை செய்வது தேவையற்றதும் பொருளற்றதும் ஆகும்.

— நிரல் நிறை, காரைக்குடி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.